

# உதயசூரியன்

Uthayasooriyan

උදය සූරියන්

கதிர் : 06 | நவம்பர், டிசம்பர்- 2007 | விலை : 10.00

# ஐக்கியப்பட்ட அகிம்சை வழி செயற்பாட்டின் ஊடாகவே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்

**தமிழ் மக்கள் மிகவும் இக்கட்டானதும் அவலமானதுமான வாழ் நிலையை அடைந்துள்ள இன்றைய சூழலில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழ் மக்களிடையே பலமான ஐக்கியம் தேவைப்படுகிறது.**

தமிழ் மக்களின் அறிவார்ந்த அரசியல் தலைவர்கள் பலரும் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டு பாரிய வெற்றிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புலிகளின் தொடர்ச்சியான துரோகத்தினால் தமிழ் மக்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் வாழ்பவர்கள் நாங்கள் மிகவும் உறுதியான ஐக்கியத்தை எமது மக்களின் பேரில் கட்டியெழுப்புவது அவசியமாகும்.

தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை சமாதான வழிகளில் வென்றெடுப்பதற்கும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைப்பதற்கும் இத்தகையதோர் ஐக்கியம் அவசியமானதாகும்.

விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோத போக்குகளினாலும் தமிழ்



மக்களின் தலையில் மண் அள்ளிக் கொட்டும் அவர்களின் வேலைகளினாலும் வன்முறை பயங்கரவாத செயல்களினாலும் உலக சமூகம் அவர்கள் மேல் நம்பிக்கை இழந்துள்ளது.

எமது தமிழ் மக்களும் அவர்களின அராஜகத்தின் கீழ் வாழ முடியாது என்ற நிலைப்பாட்டிற்கு வந்து சேர்ந்துளளனர். விடுதலைப் புலிகளின் செயறபாடுகள் தமக்கு விடுதலையை பெற்றுத் தராது மாறாக மேலும் மேலும் அழிவுகளையே அதிகரித்துச் செல்லும் என்பதையும் தாம் கையேந்தி வாழும் நிலைக்கு மாத்திரமல்ல வாழ முடியாத நிலைக்கும் தள்ளப்படுவோம என்பதை மக்கள் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளார்கள். புலிகள் தமது பிள்ளைகளை அநியாயமாக பலியாக்கி விட்டார்கள் தமது சொத்துக்கள், குடிமனைகள் பாழாய் போவதற்கு வழிவகுத்து விட்டார்கள் அவர்கள் திரும்பாத ஊருக்கு வழி சொல்பவர்கள் என்பதை விளங்கிக் கொண்டு விட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் நிலவும் வரை தமது வாழ்க்கையும் நிச்சயமற்றதென்றே முஸ்லீம் மக்களும் கருதுகிறார்கள். 1990 இல் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மககள் புலிகளின் அராஜகம் தலைவிரித்தாடும் வரை தாம் வடக்கிற்கு செல்ல முடியாதென கருதுகிறார்கள்.

வன்னிவாழ் மக்களோ புலிகளின் இரும்பு பிடியிலிருந்து விடுபடுவதற்கு வழி தெரியாமல் தவிக்கிறார்கள்.

இதேவேளை இலங்கையில் இனப பிரச்சனைக்கு சமஷ்டி முறையிலான தீர்வை ஏற்படுத்துவதற்கு நாம் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டிய அவசியம் இருக்கிறது.

புலிகளோ இலங்கையில் இனப் பிரச்சனைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கு கிடைத்த பொன்னான வாய்ப்புக்களையெல்லாம் பாழாக்கி விட்டார்கள்.

1983 இற்கு பின்னர் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு கிடைத்த சந்தர்ப்பங்களை சரியான முறையில் நாம் பயன்படுத்தியிருந்தால் தமிழ் மக்கள் கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்க முடியும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம், சந்திரிகா அவர்களின் ஆட்சிக்காலத்தில்

தொடர்ச்சி 02ம் பக்கம

# கொலைகளை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு செல்லவும்



**அன்புள்ள பிரபாகரன்,**

கடந்த திங்கட்கிழமை அனுராதபுரத்தில் உம்மால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை நான் மிக வன்மையாக கண்டிககின்றேன். இந்த சம்பவம் யாரும் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரு நிகழ்ச்சியல்ல. நியாயமாக சிந்திக்கும் ஒவ்வொருவரும் உமது கொடூரமான இச் செயலுக்கு உம்மை திட்டத்தான் செய்வார்கள். இருப்பினும் மனைவி மக்களுடன் பாதுகாப்பாக வாழ்கின்ற ஒரு சிலர் உமது செயலை மிகைப்படுத்தி பாராட்டும் தெரிவிப்பர். உமக்கு பாராட்டு தெரிவிக்குமளவுக்கு உமது செயல் தகுதியானதல்ல. இந்த நடவடிக்கையில் 35 உயிர்கள் பலிகொள்ளப்படுவதற்கு காரணமாய் இருந்திருக்கிறீர். அவற்றில் 14 பேர் ஏழை சிங்கள குடும்பங்களில் இருந்து பிழைப்புக்காக விமானப்படையில் சேர்ந்துள்ளனர். மிகுதி 21 பேரும் உம்மால் கரும் புலிகளின் தற்கொலை படைக்கு பலாத்காரமாக இணைக்கப்பட்டு மூளைச்சலவை செய்யப்பட்டவர்களாவர். அவர்கள் கூட தத்தம் குடும்பங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ள ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். பத்திரிகைகளில் உம்மை நடுவில் வைத்து எடுக்கப்பட்ட 22 பேரடங்கிய போட்டோவில் உள்ள 22 பேரும் இறந்திருந்தால் உம்மை உண்மையான வீரனென பாராட்டியிருப்பேன். ஆனால் உம்முடன் படத்தில் தோன்றும் 21 ஏழைப்பெற்றோரின் பிள்ளைகளை பலியெடுத்தது வருத்தத்திற்குரியதாகும்.

உமக்கு பொருந்தக்கூடிய ஒரு பொருத்தமான தமிழ் பழமொழி “காது கேளாத ஒருவரின் காதில் சங்கு ஊதுவது” போலாகும்.

நான் எவ்வளவு புத்திமதி கூறினாலும் நீர் அதை செவிமடுப்பதில்லை. தமிழ் ஈழம் அடைய முடியாததென்றும அப்படி அடைந்து விட்டால் கூட ஒரு நாள்தன்னும் அதை காப்பாற்ற முடியாது என்றும் உமக்கு தெரியும். சர்வதேச சமூகமும் அதை ஒருபோதும் ஆதரிக்காது. அப்படியிருந்தும் ஒருபோதும் அடைய முடியாததும், கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக அடைய முடியவில்லை என அறிந்திருந்தும் பல மனித உயிர்களை பலியிடுவதில என்ன பயனை அடைய போகின்றீர். 70-80 ஆயிரம் உயிர்கள் இழக்கக் காரணமாக இருந்து பல்லாயிரக்கணக்கான விதவைகள், அநாதைகள் ஊன முற்றோரை. உருவாக்கவும், பல கோடி ரூபா பெறுமதியான சொத்து அழிவுக்கும் காரணமாக இருந்த நீர், இன்று மீண்டும் ஆரம்பித்த இடத்துக்கே வந்துள்ளீர். கிழக்கு மாகாணத்தை முற்று முழுதாக இழந்து விட்டீர். வட பகுதியையும் நீர் இழப்பது உறுதி. ஆனால் சில காலம் செல்லலாம். தமிழீழம் அடைவதற்கல்ல. உமது சுய கௌரவத்தை பாதுகாப்பதற்கான அம் முயற்சியில் வட பகுதியில் வாழும் தமிழினத்தை முற்றாக அழித்து விடுவீர். தமிழ் சமுதாயமோ அல்லது சர்வதேச சமூகமோ உமது இத்தகைய வழிமுறைகளை பாராட்டப்போவதுமில்லை, அங்கீகரிக்கப் போவதுமில்லை. தயவு செய்து எனது ஆலோசனைகளை தீவிரமாக பரிசீலிக்கவும். இன்னும் காலம் கடந்துவிடவில்லை. இந்திய முறையிலான அல்லது நீர் விரும்பும் ஏதோவொரு வகையான ஒரு நியாயமான தீர்வுத் திட்டம் ஏற்படுவதற்கு உடனடியாக உடன்படவும். நாம் காணும் தீர்வு தவணை முறையில் அமையாமல் எதிர்காலத்தில் மீண்டும் ஒரு போராட்டத்தை ஆரம்பிக்க வழிவகுக்காது ஒரு நிரந்தர தீர்வாக அமைய வேண்டும். மதி கெட்ட இத்தகைய செயல்களில் ஈடுபட முடியுமாக இருந்தால் கணக்கற்ற முறையில் தினமும் நடைபெறும் கொலைகள், ஆட்கடத்தல், பணம் பறித்தல் போன்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்களை பிடிப்பதற்கு ஏன் முடியவில்லை. அண்மையில் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்க சமாஜ தலைவர் வெட்டிக் கொலை செய்யபட்டது நீர் அறிந்ததே. அத்தகையவொரு ஆட்கடத்தல், கொலை சம்பவத்தை காட்டிக்கொடுத்து எத்தகையவொரு குற்றச் செயல்களிலும் உங்களுக்கு சம்பந்தமில்லை என்பதை நிரூபித்துக் காட்டவும்.

தயவு செய்து ஒரு விடயத்தை உணரவும். நான் எந்தக் கொலையையும் கண்டிக்க தவறவில்லை என்பதோடு எக் காரணம் கொண்டும் கொலைகளை மறைக்க உதவுபவனும் அல்ல. எந்தவிதமான கொலைகளாக இருந்தாலும் அவற்றை நீர் நிறுத்தும் மறுகணமே ஏனைய கொலைச் சம்பவங்கள் தானாகவே நின்றுவிடும். ●

# குணத்திலும் தருமரே



ஈழத்தின் பழம் பெரும் அரசியல்வாதியும், சமூக தொண்டனுமாகிய தர்மரின் அகால மரணச் செய்தி எம் எல்லோரையும் அதிர வைத்தது. அன்னாரின் இழப்பு தனிப்பட்ட ஓர் குடும்பத்தின் இழப்பல்ல, விடுதலைக்காக போராடும ஓர் இனத்தின் இழப்பாகும்.

ஈழத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் ஊழல் அற்ற நிர்வாகத்தை நிலைநாட்டிய பெருமை தர்மரையும் சாரும். அவரைப் போன்ற அனுபவம் மிக்கவர்களே உள்ளூராட்சி நிர்வாகத்தில் எம்மைப் போன்ற புதியவர்களுக்கு அன்று வழி காட்டியாகவும் அமைந்தார்கள்.

இலங்கை பாராளுமன்றத்தில் ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகள் அங்கத்துவம் வகித்த தருமருடன் பதினான்கு ஆண்டுகள் கூட்டாக அங்கத்துவம் வகிக்கும் வாய்ப்பை பெற்றவன் நான். பாராளுமன்ற நடைமுறைகளை கற்றுத் தருவதில் மறைந்த எம் தலைவர் திரு. தர்மலிங்கம் எனக்கு குருவாகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற அரங்கில் மாற்றுக் கடசிகளுடன் சூடான விவாதங்கள் நடைபெறும் போது பொறுமையைப் பெருமளவில் கையாள்வதில் தருமராகவே விளங்கினார். தனது அனுபவத்தினாலும், மதிநுட்பத்தினாலும் பல ஆளும் கட்சியினரின் வாய்களை அடைக்கச் செய்த சம்பவங்கள் எமக்கு பெருமை அளித்த நிகழ்ச்சிகளாகும்.

பெரும் பணக்காரராக இருந்தும், எளிய முறையில் வாழ்ந்து காட்டியும், சகஜமாக ஏழை, எளிய மக்களுடன் பழகியும் நல்லவர் என்ற பெயர் எடுத்தார். சகல இன, மத மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்த தர்மருக்கும் எதிரிகள் என்று யாரும் இருக்கவில்லை. எல்லோரும் அவரின் அன்பர்களும் நண்பர்களுமே ஆவர்.

ஏறக்குறைய முப்பந்தைந்து ஆண்டுகள் சமூகத் தொண்டிலேயே தன்னை அர்ப்பணித்த இவருக்கு துப்பாக்கிக் குண்டுதான் பரிசா? இரு பிள்ளைகளுக்கு தந்தையாகி, தன் ஒரே மகனை ஈழ விடுதலைக்கு அர்ப்பணித்த தர்மருக்கு துப்பாக்கி குண்டுதான் பரிசு என்றால் அதற்கு காரணமானவர்களை தமிழன்னை மன்னிப்பாளா? இதற்கு ரெலோ அமைப்பு பதில் கூறுமா?

வீ. ஆனந்தசங்கரி

நன்றி- விடுதலை நெருப்புக்கள்

உதயசூரியன்
Uthayasooriyan
E-mail: uthayasooriyan_sl@yahoo.com Tel : 0602135912

## [illegible]சிந்தனையில்

### தமிழ் மக்களின் பாதுகாவலர் யார்?

தமிழ் மக்களின் பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாகியுள்ளது. எப்போது என்ன விபரீதம் நடக்கும் என்று எவராலும் தீர்மானிக்க முடியாத நிலையில் நாடு இன்று சீரழிந்து கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களின் பாதுகாவலர்கள் யார்? எவ்வாறு பாதுகாக்கப் போகின்றார்கள். தினம் தினம் செத்து மடிந்து கொண்டிருக்கும் அப்பாவி மக்களின் துயரங்களை துடைப்பது யார்? தமிழ் மக்களுக்கு சரியான தீர்வை யார்? எப்போது ? எப்படி? பெற்றுக்கொடுக்கப் போகின்றார்கள். தமிழ் மக்களின் ஒரே பாதுகாவலர்கள் தாங்கள்தான் எனக்கூறிவந்த விடுதலைப் புலிகள் தங்களின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் உயிரைக்கூட கிளிநொச்சியில் வைத்து பாதுகாக்க முடியவில்லை என்றால் கிளிநொச்சி வாழ் ஏனைய தமிழ் உடன் பிறப்புக்களின் உயிருக்கு என்ன உத்தரவாதம்? கிளிநொச்சியில் உள்ள தமிழ் மக்களோ பீதியுடன் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. இதற்கெல்லாம் காரண கர்த்தாக்கள் யார்?

தந்தை செல்வா அவர்கள் அரும்பாடுபட்டு எல்லா தமிழர்களையும் ஒன்றிணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி ஒற்றுமையுடன் அகிம்சை வழியில் போராடியதன் பயனாகத்தான் தமிழர்களுக்குள்ள பிரச்சனைகயையும் அவர்கள் இலங்கையில் அனுபவிக்கும் வேதனைகளையும் வெளி உலகுக்கு கொண்டு சென்றார். குறிப்பாக நம் அண்டை நாடான இந்தியாவுக்கு சென்று பலதரப்பட்ட அரசியல் தலைவர்களையும் சந்தித்து இலங்கை தமிழரின் இன்னல்களை எடுத்துக் கூறி ஒட்டுமொத்த இந்தியாவையும் நமது பக்கம் திருப்பினார்.

அவர் வழிவந்த அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் அயராத உழைப்பும் எதையும் தாங்கும் மனப்பக்குவமும் கொண்டு பல சோதனைகளுக்கு மத்தியில் எமது பிரச்சினையை சர்வ தேச சமூகத்திற்கு எடுத்துரைத்து எமக்கு [illegible]ரவாக செயற்பட அரும் பணியாற்றி [illegible] அந்த காலகட்டத்தில்தான் அமரர் [illegible]ம் அவர்கள் இளைஞர்களை ஒன்று திரட்டி [illegible]ரவையை உருவாக்கினார். இளைஞர்கள் மட்டும் [illegible]மையாக ஓரணியில் இருந்து போராடியிருந்தால் இன்று நமக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இளைஞர்கள் போராட்டம் என்ற போர்வையில் ஒருவரையொருவர் கொன்று குவிப்பதும் [illegible]ளையும் பல உன்னதமான அரசியல் தலைவர்களையும் விடுதலை என்ற பெயரில் கொன்று குவித்து தமிழினத்தின் பண்புகளையெல்லாம் அசிங்க படுத்தி விட்டனர். இதுதான் எமது எதிரிகளுக்கு ஒரு வாய்ப்பாக போய்விட்டது.

இந்த [illegible]திலாவது தங்களை தமிழின தலைவர்கள் எனக் [illegible]கொண்டு ஒவ்வொரு அணியாக பிரிந்து ஏதோவொரு காரணத்துக்காக ஒருவரையொருவர் [illegible]ளாலும், ஆயுதங்களாலும் மோதிக் கொண்டிருப்பவர்கள் சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதே எமது எண்ணம். சிந்திப்பார்களா? அரசும் சரி, விடுதலைப் புலிகளும் சரி தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை சரியான வகையில் கையாளவில்லை என்பது உலகறிந்த விடயம். யாரை யார் வெல்வது என்ற போட்டியே அவர்களிடத்தில் மிஞ்சி நிற்கிறது. அவர்களுக்கு தமிழ் மக்களின் நலனைப் பற்றி சிந்திப்பதற்கு நேரமில்லை. போகிற போக்கில் ஒட்டு மொத்தமாக தமிழ் மக்கள் அழிந்தாலும் சரி நாங்கள் ஒருவரையொருவர் மோதிக் கொள்வதை கைவிடப் போவதில்லை என்ற எண்ணமே அவர்களிடத்தில் [illegible] நிற்கிறது.

[illegible] பற்றி நமது அண்டை நாடான இந்தியாவும் என்ன நினைக்கின்றது என்பது எவருக்குமே புரியாத புதிராக உள்ளது. எல்லோரும் மௌனியாகி விட்டார்கள் என்ற எண்ணமே தமிழ் மக்கள் மனதில் நிலை கொண்டுள்ளது.

[illegible]ரினை துடைப்பதற்கு ஒரேவழி காரண, [illegible]ராமல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு ஒரே அணியில் நின்று ஒட்டு மொத்த தமிழ் மக்களின் விடிவிற்கு குரல் கொடுத்து அவர்களின் [illegible] நிம்மதியான வாழ்விற்கு வழி சமைப்போம்

[illegible] கோரிக்கையை கைவிட்டு சமஷ்டி [illegible]யிலான தீர்வை முன்னெடுப்போம்.

# ஐக்கியப்பட்ட அகிம்சை வழி...............

01ம் பக்கத் தொடர்ச்சி

முன்வைக்கப்பட் சமஷ்டி முறைமை, 2002 இன் பின்னர் ஒஸ்லோவில் ஏறறுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் இவற்றில் ஏதாவது ஒன்றைத்தானும் நாம் கரிசனையுடன் அணுகியிருந்தால் மக்கள் பற்றிய பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டிருந்தால் பாரிய அழிவுகளை தவிர்த்திருக்க முடியும்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தாங்கள் என்று விடுதலைப் புலிகள் சொல்லிச் சொல்லியே தமிழ் தலைமையை அழித்து விட்டார்கள்.

தற்போதுள்ள நிலையில் அதிகாரப் பகிர்விலும், ஜனநாயகத்திலும் அக்கறைக கொண்ட கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும்.

தற்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனநதசங்கரி அவர்களின் தலைமையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் ஆகிய கட்சிகள் இணைந்து செயற்படுகின்றன. இநத கூட்டமைப்பு சமஷ்டி முறையிலான தீர்வை வலியுறுத்தி வருவது மக்கள் அறிந்ததே.

நாம் இடையறாது சமஷ்டி முறையிலான தீர்வை வலியுறுத்தி வருகிறோம். இலங்கையில் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவிலும் வெளியிலும் நாம் சமஷ்டி முறையை வலியுறுத்தி வருகிறோம் ராஜதந்திர வட்டாரங்களிலும் இதனை நாம் சொல்கிறோம். புலம் பெயர் தளததிலும் எமது நிலைப்பாட்டை தெளிவு படுத்தியுள்ளோம். இதுவே எமது நிலைப்பாடு. இந்த சமஷ்டி என்ற சொல் ஏற்றுக்கொள்ளப்படா விட்டால் ஒற்றையாட்சி என்ற பதப்பிரயோகத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை நாம் ஏற்றுக்கொள்ள தயராக இல்லை.

அண்மையில் ஐக்கிய தேசிய கட்சி தமது சமஷ்டி நிலைப்பாட்டிலிருந்து விலகிய போதும் அது பற்றிய விமர்சனம் முன் வைக்கப்பட்டது.

ஒற்றையாட்சியின் கீழ் பரவலாக்கப்படும் அதிகாரங்கள் மத்திய அரசால் திரும்பப் பெறப்படுவதில் மிக இலகு வான வழிமுறைகள் காணப்படுவதால தான் நாம் அதனை நிராகரிக்கிறோம்.

இல்லாவிடில் மாற்று வழி ஒன்றுண்டு இத்தகைய பதப்பிரயோகங்கள் எவையும் பயன்படுத்தாமல் அதிகூடிய அதிகாரப் பகிர்வை அரசியல் யாப்பை மறு சீரமைப்பதன் மூலம் உறுதிப் படுத்துவது.

முஸ்லீம் மக்களுக்கும், மலையக மக்களுக்கும் அவர்களுடைய தனித்துவங்கள், சமூக பொருளாதார அபிலாசைகள் கருதி ஏற்புடைய அதிகார பகிர்ந்தளிப்பு நிகழ வேண்டும்.

இத்தகைய அதிகாரப் பகிர்ந்தளிப்பினூடாக இலங்கை ஒரு ஐக்கிய தேசமாக உருவாக வேண்டும். இங்கு எந்தச் சமூகமும் இரண்டாம் பட்சம் அல்ல என்ற நிலை ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதே எமது தெளிவான நிலைப்பாடாகும்.

இத்தகைய அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்துவதற்காக எமது தலைவர் அமிர்தலிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம் போன்றவர்கள் தமது உயிரை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

கடந்த 30 வருடங்களில் பெரும்பாலான காலங்களில் மக்கள் நிச்சயமற்ற நிலையையும், அகதி வாழ்க்கையையும், இடம் பெயர்வையுமே சந்திக்க வேண்டியிருநதது. அது இன்றும் தொடர் கதையாகத்தான் இருக்கிறது. இந்தத் தொடர்கதை முடிவுக்கு வர வேண்டும். அதற்கு ஒரேயொரு மாற்றுவழி தான் உண்டு. தமிழ் மக்களினதும் இலங்கையின் சிறுபான்மை சமூகங்களினதும் அபிலாசைகளுக்கு அரசியல ரீதியான தீர்வு காண்பதே அந்த வழி. அதைவிட வேறு எந்த குறுக்கு வழிகளும் கிடையாது.

பயங்கரவாதத்தையும, வன்முறையையும் முடிவுக்குக் கொண்டு வந்து தமிழ் மக்களின் அபிலாசைகள் நேர்மையுடனும், நியாய உணர்வுடனும் பேணப்பட வேண்டும் என்பதை அரசுக்கு திரும்ப திரும்ப வலியுறுத்தி வருகிறோம்.

சமஷ்டி என்ற பதம் பெரும்பான்மை சமூகத்தினருக்கு விருப்பமில்லாத பதமாக இருநதால் ஒற்றையாட்சி என்ற பதத்தையும் விட்டுவிடுங்கள். ஐக்கிய இலங்கைக்குள் இந்திய முறையை ஒத்த அதிகார பகிர்ந்தளிப்பை நடைமுறை படுத்த முயலுங்கள் என எமது தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறார்.

எமது கூட்டமைப்பு இந்த இலக்கை நோக்கியே செயற்படுகிறது. அதிகாரப பகிர்வு, ஜனநாயகத்திலும் அக்கறையுள்ள, ஈடுபாடுள்ள சக்திகளை ஒன்றிணைத்து எமது ஐக்கியத்தை விரிவுபடுத்தி ஒருமித்த குரலில் தமிழ் மக்களின அபிலாசைகளை வெளிப்படுத்துவதும் அகிம்சை வழியிலான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதுமே எமது நோக்கமாகும். பெருந்திரளான மக்களின் அபிலாசைகளை முன்கொண்டு செல்வதே எமது பணியென கருதுகிறோம்.

வன்முறையை பயங்கர வாதத்தை சமகால உலகில் இந்தியாவோ ஐரோப்பாவோ, வட அமெரிக்காவோ கனடாவோ, அவுஸ்திரேலியாவோ ஜப்பானோ ஏனைய பிற நாடுகளோ ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.


அரச பயங்கரவாதத்திற்கப்பால் அடிப்படைவாதக் குழுக்களின் பயங்கரவாதம் சகிக்க முடியாததாகவும் பல நூற்றுக்கணக்கான மக்களின் உயிர்களை குடிப்பதாகவும் மாறியிருப்பதனாலும் சாதாரண அன்றாட வாழ்விற்கு அச்ச மூட்டுவதாக மாறியிருப்பதாலும் சீர்குலைப்பதாலும் சகிக்க முடியாததாகவும், அருவருப்பானதாகவும் உலக சமூகத்தினரால் பார்க்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

வடஅமெரிக்கா கனடா, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளில் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கமாக மாற்றப்பட்டதற்கும் இதுவே காரணம்.

இந்தியாவிற்கு பிரத்தியேகமான அனுபவம் உண்டு. இந்தியாவின் முனனாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலை என்பது ஒன்றும் சாதாரண விடயமல்ல. ஆயிரம் மில்லியன் மக்களின் தலைவர் உலக தலைவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர். இந்தியாவின் சிற்பி, சுதந்திர போராட்டக்காரர் ஜகவர்லால் நேருவின்பேரனும் அன்னை இந்திராகாநதியின புதல்வரும் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமுமான ராஜீவ்காந்தியின் படுகொலையை இந்தியா இலகுவாக எடுத்துக் கொள்ளும் என யாரும் கருதுவார்களாக இருந்தால அவர்களை விட அறிவு சூனியங்கள் வேறு எவரும இருக்க முடியாது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவாக உரைத்திருந்தார். ஐக்கிய இலங்கைக்குள் அமைதி வழியில் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாசைகளை பிர்திபலிக்கும் வகையிலான தீர்வே ஒரே வழியென அவர் தெரிவித்திருந்தார். எனவே தமிழ் மக்கள் மாயைகளில் சிக்கி விடாமல் யதார்த்த நிலைமைகளில் இருந்து சிந்தித்து செயற்பட வேண்டும். அதற்கான காலமும் இது தான்.

# உண்மையான ஜனநாயகம்



அகிம்சையின் இயல்பு காரணமாக அதனால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. அந்த லட்சியமும் அதற்குக் கிடையாது. ஆனால் அகிம்சையினால் வேறு எத்தனையோ செய்ய முடியும். அரசாங்க இயந்திரத்தைக் கைப்பற்றாது அதிகாரத்தை திறம்பட கட்டுப்படுத்தவும், வழிகாட்டவும் முடியும். அதுவே அதன் விஞ்சிய சிறப்பு.

டுவார்ட்ஸ் நியூ பொரைஸன்(1959). பக் 91-92

அகிம்சை அறிவியலே உண்மையான ஜனநாயகத்தை நோக்கி இட்டுச் செல்லும்.

யங் இந்தியா.30-6-1920 பக்3

ஜனநாயகத்தின் சாரம் யாதெனின் அனைவரின் பொது நலத்திற்கான பணியில் பலவகைப்பட்ட மக்களின் பௌதிக, பொருளாதார ஆன்மீக வளங்கள் யாவற்றையும் ஒன்று திரட்டி விகசிக்கச் செய்யும் கலையும் விஞ்ஞானமும் ஆகும்.

அரிஜன் 27-5-1939. பக்.143

விவேகம் நிறைந்த கட்டுப்பாடான ஜனநாயகம் உலகிலேயே மிகவும் சிறந்தது. அறியாமை, மூடநம்பிக்கை, விருப்பு-வெறுப்பு கொண்ட ஜனநாயகம் பெருங் குழப்பத்தில்தான் முடியும், தன்னைத்தானே அழித்துக் கொள்ளும்

ஜங் இந்தியா. 30-7-1931 பக்.199

உண்மையான ஜனநாயகத்தில் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தாங்களே சிந்திக்க கற்பிக்க வேண்டும். இந்த உண்மையான புரட்சியை எப்படி நிகழ்விப்பது என்று எனக்குத் தெரியவில்லை எனக்குப் புலப்படும் ஒரே வழி, பெருந்தன்மை முதலில் வீட்டிலிருந்தே துவங்க வேண்டும் என்பது போன்று ஒவ்வொரு சீர்திருத்தமும் தன்னிடத்திலிருந்துதான் துவங்க வேண்டும்.

அரிஜன்: 14-7-1946. பக்.220

ஜனநாயகம் பற்றிய எனது கருத்து என்னவென்றால் வலிமை வாய்ந்தவனைப் போல நலிவானவனுக்கும் அதே வாய்ப்பு கிடைக்க வேண்டும். என்பதே. அகிம்சையைத் தவிர வேறு எந்த வழியிலும் அதை அடைய முடியாது.

"மகாத்மா" தொகுப்பு -05. (1952). புக் 343.

உண்மையான ஜனநாயகம் அல்லது மக்களின் சுயராஜ்யம் ஒருக்காலும் உண்மைக்குப் புறம்பான வன்முறை வழிகள் மூலம் வராது அதற்கான எளிய காரணம் இதுதான். வன்முறையின் இயல் விளைவு அடக்குமுறை மூலம் எல்லா எதிர்ப்புக்களையும் ஒடுககுவதாகும். அல்லது எதிர்ப்பவர்களை அழித்து விடுவதாகும். அப்போது தனிநபர் சுநத்திரத்திற்கு இடம் ஏது? கலப்படமற்ற அகிம்சை ஆட்சியிலேயே தனிநபர் சுதந்திரம் முழுவீச்சும் பெற முடியும்.

அரிஜன். 25-5-1939. பக் 143

ஜனநாயகம் வன்முறையும் ஒன்று சேராது. இன்று பெயரளவில் ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடுகளில் எதிர்கட்சிக்கு இடங்கொடாத ஒரேகட்சி சர்வாதிபத்தியமான ஆட்சியாகத்தான் ஆகிவிடும். மாறாக, உண்மையில் ஜனநாயகம் மலர வேண்டுமானால் வன்முறையை அறவே கைவிடத் துணிய வேண்டும். 'தனிநபர்கள் மட்டுமே அகிம்சையை கடைபிடிக்க முடியும், தனிநபர்கள அடங்கிய நாடுகளால் அவ்வாறு முடியாது' என்று கூறுவது தெய்வ நிந்தனை போன்று அடாத பழிப்புரையாகும்.

அரிஜன்-12-11-1938. பக். 328

நாமெல்லோரும் ஒரு போதும் ஒன்று போல சிந்திப்பது இல்லை. மேலும், சத்தியத்தை வெவ்வேறு கோணங்களிலும் துண்டு துண்டாகவும் நாம் காண்கிறோம். எனவே (எது மேலான

தொடர்ச்சி 07ம் பக்கம

# இலங்கை தமிழ் பேசும் மக்களை கைவிட்டுவிட வேண்டாமென தமிழ்நாட்டு தலைவர்களுக்கும் மக்களுக்கும் உருக்கமான வேண்டுகோள்.

தமிழ் நாட்டு தலைவர்களும் மக்களும் இலங்கை பிரச்சினையின் தீர்வுக்கு வழங்கும் ஆதரவானது எவ்வித தீர்வுக்கும் உதவாதது மட்டுமன்றி எதிர் விளைவுகளையே அது ஏற்படுத்தும். ஆகவே ஐக்கிய இலங்கைக்குள் ஒரு நியாயமான தீர்வை காண்பதற்கு தமிழ் நாட்டிலுள்ள சம்பந்தப்பட்ட சகலரும் பல்வேறு வேற்றுமைகளை மறந்து செயற்பட வேண்டுமென மிகுந்த ஆர்வத்துடன் வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டில் இயங்கும் சகல அரசியல் கட்சிகளும் ஒருமித்து தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஊக்கமளிக்கக கூடாது. சர்வதேச சமூகம் பிரிவினையை முற்று முழுதாக எதிர்க்கிறது. இந்தியாவும் இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை வலியுறுத்தி வருகின்றது. தொடர்ந்து நாட்டுப் பிரிவினைக்காக போராடுவது காலத்தை வீணடிப்பது மட்டுமல்லாது உயிர்ச்சேதங்களையும், சொத்தழிவுகளையும் ஏற்படுத்தும். இதை ஒவ்வொரு இந்திய மகனும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

50 ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்ட முதிர்ந்த தமிழரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நான் இனப்பிரச்சனை பற்றியும் அதன் தீர்வு பற்றியும் நன்கு அறிவேன். கிளிநொச்சி தொகுதியை பாராளுமன்றத்தில் 14 ஆண்டுகளுக்கு மேல் பிரதிநிதித்துவப்படுத்தியதும், அதை தனிமாவட்டமாக்கியதும் நானே. எனது இல்லத்திலிருந்து 200 யார் தூரத்திலேயே விடுதலைப் புலிகளின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ளது. இந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் உண்மையானதாகவும், அதிகாரபூர்வமானதும் எனக் கொள்வதோடு இதில் எப்பகுதியேனும் பிழையாக இருப்பின் யாரும் மறுப்பு தெரிவிக்க முடியும். 20 மைல் இடைவெளியில் பாக்குநீரிணைக்கப்பால் தமிழ் நாட்டில் வாழும் ஆறு கோடி மக்கள் இலங்கையில் தம் இன மக்கள் பற்றி கவலையடைவது நியாயமானதே.

ஆகவேதான் தமிழ்நாடு இலங்கை இனப்பிரச்சனை தீர்வில் கவனமாகவும். எச்சரிக்கையாகவும் செயற்பட வேண்டுமேயன்றி மனக்கிளர்ச்சியையும், உணர்ச்சியையும் தூண்டக்கூடிய பேசுக்களால் மக்கள் தூண்டிவிடப்படக் கூடாது. தமிழ்நாடு நியாயமான தீர்வை காண்பதற்கு விசுவாசமாக விரும்பினால் அது நாட்டின் கள நிலைமை பற்றி சரியாக அறிந்திருக்க வேண்டும்.

### தமிழ்ச்செல்லவனின் மரணம

தமிழ்ச்செலவன் அவர்கள் மகாத்மாகாந்தி போன்றோ, அன்றி மார்ட்டின் லூதர் கிங் போன்றோ மக்கள் கொதித்தெழக்கூடிய வகையில் கொலை செய்யப்படவில்லை. விடுதலைப் புலிகளும் அரசும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் யுத்த களத்திலேயே அவர் இறந்தார் என்பதையும் மக்கள் உணர வேண்டும். ஒருவரையொருவர் மிஞ்சி செயற்பட வேண்டுமென்று போட்டி போட்டுக் கொண்டனர். தமக்கு தாமே புகழ் தேடக்கூடிய நோக்கோடு விடுதலைப் புலிகள் அண்மையிலும் கூட பல முக்கியஸ்தர்களை கொல்ல முயற்சித்தனர். பாதுகாப்புச் செயலாளர் திரு. கோத்தபாய ராஜபக்ஷவை இலக்கு வைத்து தற்கொலை குண்டுதாரி தாக்கியவேளை மயிரிழையில் அவர் உயிர் தப்பியபோதும் பாதுகாப்பு அதிகாரிகளும், குண்டுதாரியும் அதே யிடத்தில் பலியானார்கள் அதேபோன்று இராணுவத்தளபதி லெப். ஜேனரல். சரத் பொன்சேகா தற்கொலை குண்டு வெடிப்பில் படுகாயமடைந்து நீண்ட நாள் வைத்தியத்தின பின் தப்பினார்.

ஆனால் பல பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், தற்கொலை குண்டுதாரியும் அதேயிடத்தில் பலியானார்கள் இவ்விரு தற்கொலையாளிகள் தம் பெற்றோரிடமிருந்து பலாத்காரமாக பிரித்தெடுக்கப்பட்டு போரிடுமாறு மூளைச்சலவை செய்யப்பட்டு விடுதலைப் புலிகளால் பலியிடப்பட்டுள்ளர். இவ்விரு கொலைகளுக்கும் தமிழ்ச்செல்வன் பெறுப்பேற்க வேண்டாமா என்ற கேள்வி ஒவ்வொருவரின் உள்ளத்திலும் எழ வேண்டும். தமிழ்ச்செல்வனை இலக்கு வைத்தமைக்கு இராணுவத்தை எவ்வாறு குறைகூற முடியும். கொலை குற்றத்திற்காக குறைந்தபட்சம் கொலை செய்ய தூண்டியதற்காகவேனும் தமிழ்ச்செல்வன் குற்றஞ் சாட்டப்பட்டிருக்க வேண்டும். ஒரு காலத்தில் ஒருபகுதி தமிழ் மக்களால் சுதந்திர போராளிகள் என பாராட்டப்பட்டு பிற்காலத்தில் அவர்களுடைய கொடூரச் செயல்களால் மதிப்பிழந்த ஒரு இயக்கத்தின் உப தளபதியாக செயல்பட்ட ஒருவரின் மரணத்துக்கு ஆர்பாட்ட ஊர்வலங்களும், கண்டன கூட்டங்களும் நடத்துவதில் அர்த்தமில்லை.

மேலும் இது சம்பந்தமாக இலங்கை தமிழர்களே பெரிதாக அலட்டிக் கொள்ளாத அதேவேளை சர்வதேச சமூகம கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை. கள நிலைமை பற்றி போதிய விளக்கமின்மையும் புலிகளின் பொய் பிரச்சாரமுமே மூளைச்சலவை செய்யப்பட்டு சுயமாக சிந்திக்கின்ற தன்மையை இழந்த அப்பாவி தற்கொலைதாரிகளை பலிகொடுத்த குற்றச்சாட்டுக்காக வழக்கு தொடரப்பட வேண்டிய ஒருவருக்கு இவ்வாறு பதற்றமும், மிகைப் படுத்தப்பட்ட அனுதாபமும் ஏற்பட காரணமாக இருந்தது நியாயப்படுத்த முடியாத ஆட்சேபனைகளும், ஆர்பாட்டங்களும் வெல்லமுடியாதவொரு யுத்தத்தை தொடர்வதற்கு விடுதலைப புலிகளுக்கு உற்சாகம் கொடுக்கின்ற ஒரு செயலாகும்.


தமிழ்ச்செல்வனின் கொலை பற்றி உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து பல்வேறு கண்டனங்கள் வந்து குவிந்தன. சிலர் சமாதானப் பேச்சுவார்த்தை முறிந்து விடடது எனக் கூறினர். வேறு சிலர் சமாதானப் புறா கொல்லப்பட்டு விட்டதாக முறைப்பட்டனர். மிகக் கவலைதரும் விடயம் என்னவென்றால் 20 மைல் நீளம் கொண்ட பாக்குத் தொடுவாயால் மட்டும் பிரிக்கப்பட்டுள்ளவர்களுக்குககூட இலங்கை நாட்டின் நிலைமை புரிந்துகொள்ள முடியவில்லை. உலகின் பல்வேறு பகுதிகளில் இயங்கும் தமிழ் ஊடகங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் பிரதேசங்கள் பற்றிய செய்திகளை வெளியிடுவதில்லை. ஆகவே இலங்கை நிலைமை பற்றி அறியக்கூடிய ஒரேயொரு வழி பல கட்சிகளின் பிரதிநிதிகள் வடக்கு கிழக்கிற்கு வந்து விடுதலைப் புலிகளின் பிரதேசங்கள் உட்பட சகல இடங்களையும் பார்வையிடுவதே.

### ஒரு கௌரவமான கிளைக்கதை

தமிழ்ச்செல்வனே முழுபொறுப்பையும் ஏற்க வேண்டிய அவர் இறப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவத்தை நாம் இங்கு குறிப்பிட வேண்டும். மரணிக்க இருந்த 21 பேருடன் புகைப்படம் எடுத்துவிட்டு அசிங்கமான அந்த பணியை திரு தமிழ்ச் செல்வனிடம் விட்டுவிட்டு அவருடைய தலைவர் பிரபாகரன் பங்கருக்குள் ஓடி ஒளிந்து கொண்டார். 21 இளஞர்களும், யுவதிகளும் ஏனைய பல்லாயிரக் கணக்கானோரைப் போல பலவந்தமாக சேர்க்கப்பட்டு போரிடுமாறு மூளைச்சலவை செய்யப்பட்டு தலைவருடன் இராப்போசனம் அருந்தி புகைப் படமும் எடுக்கப்பட்ட பெரும் மகிழ்ச்சியை அவர்களுக்கு கொடுத்து உயிருடன் திரும்பி வரமாட்டார்கள் என அறிந்திருந்தும் உயிருடன் அனுராதபுர தாக்குதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் அறிக்கையின் படி ஒரு பெறுமதியான காரணத்துக்காக இறக்காத 21 இளைஞர், யுவதிகளின் சடலங்களை பொறுப்பேற்குமாறு யாரும் கோரிக்கை விடவில்லை. வீரமும் திறமையுமிக்க நாட்டின் பல்வேறு முன்னேற்றத்திற்கு பயன்படுத்தியிருக்கக்கூடிய இந்த 21 இளைஞர் யுவதிகளையும் கொடூரமான முறையில் கொலை செய்த, அல்லது முட்டாள்தனமாக பலிகொடுத்த சமாதானப் புறா என்றழைக்கப்படும் இம் மனிதரை சமுதாயம் மன்னிக்குமா.

இலங்கையில், இந்தியாவில் அல்லது உலகின் எப்பகுதியிலேனும் ஒரு பெற்றோர் அல்லது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக கருதப்படுகின்ற 22 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் அல்லது ஒரு அரசியல் தலைவர், அல்லது விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி செய்து புலிகளின் கொள்கையை ஆதரிப்பவர் தன்னுடைய ஆண் பிள்ளைகளில் ஒருவரையோ, பெண்பிள்ளைகளில் ஒருவரையோ புலிகளின் தற்கொலை படைக்கு கையளித்து தற்கொலை பணிக்கு அனுப்பி வைக்க முன்வருவாரேயானால் நான் விடுதலைப் புலிகளை சுத்த வீரர்கள் என பாராட்டுவேன். ஆனால் துரதிஷ்டவசமாக எமக்கு கிடைத்த செய்திகளின் படி திரு தமிழ்ச்செல்வன் உட்பட விடுதலைப் புலிகள் தலைவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் கல்வி கற்கின்ற வேளையில் உள்ளுர் ஏழைப் பெற்றோர்களின் பிள்ளைகள் பலாத்காரமாக இயக்கத்தில் சேர்க்கப்பட்டு மூன்றுமாத பயிற்சியோடு யுத்த களத்துக்கு அனுப்பப்படுகின்றார்கள. அவர்களில் அநேகர் யுத்தக்களத்தல் இருந்து உயிருடன் திரும்புவதில்லை. அவ்வாறு இறந்தவர்களின் சடலங்களுக்கு அனுபவத்துக்கும் வயதுக்கும் ஏற்ப பொருத்தமான பட்டங்கள் வழங்கி கௌரவிக்கின்றனர். பிள்ளைகளை புலிகள் இயக்கத்துக்கு வழங்க மறுக்கின்ற பெற்றோர்கள் கடுமையாக தண்டிக்கப்படுகின்றனர். பிள்ளைகள் சேர்வதை தடுக்க முடியாது போனவர்கள் தற்கொலையும் செய்து கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகள் சார்பான ஆர்ப்பாட்டங்கள் எதிலும் இனி சேர்பவர்கள் பல தடவை சிந்தித்த பின்பே சேர்வார்கள் என்றெ நான் நம்புகிறேன்.

முறைப்படி பார்க்கும் போது இந்த 21 இளைஞர், யுவதிகளும் உயிருடன திரும்ப மாட்டார்கள் என அறிந்திருந்தும் அவர்களை பலாத்காரமாக அனுராதபுர தாக்குதலுக்கு அனுப்பி வைத்த தமிழ்ச்செல்வனும், பிரபாகரனும் கொலைக் குற்றம சாட்டப்பட வேண்டியவர்கள். ஆனால் அப்பாவி தமிழ்நாட்டு மக்கள் அவர்களை பெரும் வீரர்களாக கணிக்கும் அளவிற்கு தப்பாக வழிநடத்தப்படுகின்றார்கள். இனி ஒருவரேனும் விடுதலைப்புலிகள் புகழ்ச்சியடைய நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் எதிலும் கலந்து கொள்ளமாட்டார்கள் என நம்புகிறேன். இவர்கள் தற்கொலை பணிக்கு செல்வதற்கு முன்னர் பிரபாகரனுடன் படம் எடுத்துக் கொண்டமைக்கு ஆதாரம் இருப்பதால் இந்த 21 இளைஞர், யுவதிகள் எந்தவிதமாக அனுராதபுரத்தில் இறந்தார்கள் என்பதை உலகத்துக்கு பிரபாகரன் தெரியப்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகளின் கொடூர செயல்களின் வரலாற்றில் இவர்களுடைய குற்றங்களை நிரூபிப்பதில் முதல் தடவையாக பொருத்தமான சாட்சி கிடைத்திருக்கிறது.. 21 பேருடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் விடுதலைப் புலிகளின் இணையத்திலும், உள்ளுர் பத்திரிகைகளிலும் மறுநாளே பிரசுரமானது. இந்த 21 பேரும் கடைசியாக பிரபாகரனுடன் இருந்ததற்கு போதிய சாட்சியாகும். இத்தகையவொரு பாரதூரமான புலிகளின் மனித உரிமை மீறலுக்கு எதிராக சர்வதேச சமூகம நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்ச்செல்வன் கொலையை கண்டித்து ஆதரவாக நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் அனுதாப கூட்டத்திலும் கலந்து கொண்ட ஒவ்வொருவரையும் உங்கள் பிள்ளைகளில் ஒருவரை விடுதலைப் புலிகளின் தற்கொலை படையில் சேர்த்துக்கொள் தயாரா என விசனத்துடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன. இல்லையெனில் தமது வாயை திறந்து தமது ஆட்சேபனையை தெரிவிக்காது மௌனியாக்கப்பட்ட ஏழைப் பெற்றோருடைய பிள்ளைகளின் மரணத்தின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு புகழ் தேடும் உரிமை உங்களுக்கு எப்படி கிடைத்து. இலங்கை அரசும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் அவர்களுக்கு உதவ முன்வரவில்லை. சர்வதேச சமூகம் இப்பிரச்சனையை ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மட்டத்தில் எடுக்க வேண்டும்.



### வட பகுதி முஸ்லீம், தமிழ் மக்களுடைய பரிதாப நிலை

தமிழை தாய் மொழியாகக் கொண்ட வட மாகாணத்தில் வாழும் முஸ்லீம் மக்களை புலிகள் நடத்திய கொடூரமான முறைபற்றி தமிழ் நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க தவறின் நான் எனது கடமையிலிருந்து தவறியவனாவேன். பால், வயது என்ற வேறுபாடின்றி சகல முஸ்லீம் மக்களும் வட மாகாணத்திலிருந்து தம் உடமைகள் அனைத்தும் விட்டுவிட்டு குறுகிய நேர அவகாசம் கொடுத்து வெளியேற வேண்டுமென கட்டளைப் பிறப்பித்தது. சிறு பிள்ளைகளின் காதணிகள்கூட பறிக்கப்பட்டது.

கடந்த 17 ஆண்டு காலமாக இன்று வரை 160 அகதி முகாம்களில் தெற்கே சிங்கள மக்களுடன் வாழ்கின்றனர் விடுதலைப் புலிகளின் தலையீடு இன்றி என்றோ ஒரு நாள் தமது இல்லங்களுக்கு திரும்புவோம் என படுபரிதாபகரமான நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். புலிகளின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு பயந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏறக்குறைய 300 தமிழ் பிள்ளைகள் மனித உரிமை ஆணைக்குழுவின் பாதுகாப்பில் வாழ்கிறார்கள். இதுதான் அரச கட்டுப்பாட்டின் கீழுள்ள யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலையாகும். தமிழ் மக்களில் அரைவாசிப் பேருக்கு மேல் தென்னிலங்கையில் சிங்கள, முஸ்லீம் மக்கள் மத்தியில் வாழ்கிறார்கள். ஆகவே சிங்கள மக்கள் தமிழ் மக்களை இன அழிப்பு செய்கின்றார்கள். என்ற புலிகளின் குற்றச்சாட்டு வெறும் கட்டுககதையே. இன்று தமிழர்களுக்கு விடுதலை பெற்றுத் தருவோம என்று கூறிய தமிழ் மக்கள் புலிகளிடமிருந்து விடுதலை பெற வேண்டும். இலங்கையில் என்ன நடக்கிறது. புலிகள் மக்களை எவ்வாறு துன்புறுத்துகிறார்கள் என்பவற்றை தமிழ்நாட்டிலிருந்து ஒரு குழுவினர் இலங்கை வந்து புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம் உட்பட ஏனைய பிரதேசங்களுக்கும் சென்று நேரடியாக அறிய வேண்டும்.

ஒருவரின் மரணத்திலும் நான் மகிழ்ச்சியடைபவன் அல்ல. ஒரு எதிரிக்கும் மரணம் ஏற்படுவதை விரும்பாதவன் எனது கவலையனைத்தும் தமிழீழும் அடைய முடியாது என தெரிந்திருந்தும் ஆயிரக்கணக்கில் எமது இளைஞர்களை விடுதலைப் புலிகள் பலிகொடுப்பதே. அவர்கள் ஏற்கனவே இருபதாயிரம் இளைஞர், யுவதிகளை பெற்றோர் விருப்பத்திற்கு மாறாக பலாத்காரமாக தம்முடன் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களை பலிகொடுத்துள்ளார்கள். தினமும் இளைஞர்களும், யுவதிகளும் யுத்த களத்துக்கு அனுப்பப்பட்டு மரணிக்கிறார்கள். இதைவிட பல்வேறு தமிழ் இயக்கங்களைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இவர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். 70,000 இற்கு மேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லீம்கள் உயிரிழந்துள்ளார்கள். பல்லாயிரக்கணக்கானோர் அங்க வீனர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். 30,000 மேற்பட்டோர் அநாதைகளாகவும், விதவைகளாகவும் வாழ்கின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக புலிகளின் இந்த அர்த்தமற்ற யுத்தத்தால் பல கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

தமிழ்நாட்டு தலைவர்களையும் மக்களையும் நாம் பரிந்து கேட்பது இந்த வேண்டுகோளில் குறிப்பிட்ட அத்தனையும் மிக கவனத்துக்கு எடுத்து உடனடியாக யுத்தத்தை நிறுத்துமாறும், நாட்டுப் பிரிவினையை கைவிட்டு சமஷ்டி அடிப்படையிலோ அதற்குப் பதிலாக இந்திய முறையிலான ஓர் அமைப்பையோ ஏற்றுக்கொண்டு இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும்படி ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும். அத்தகைய தீர்வுக்கு இலங்கையில் பெரும்பான்மையினரின் ஆதரவை பெற்றுக் கொள்ள முடியும். தமிழ்நாடு புலிகளை ஆதரித்து ஒரு வரலாற்றுத் தவறை புரியாமல் அனைவரும் தமது அரசியலை வேறுபாடுகளை மறந்து சமாதான முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டுமென தமிழ்நாட்டு தலைவர்களையும், தமிழக மக்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

# தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் வீ. ஆனந்தசங்கரி அவர்கள் 22.10.2007 இல் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை



சர்வதேச தொடர்புகள் மற்றும் உத்தி சார்ந்த ஆய்வுகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவன ஆதரவில் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் வாய்ப்பினை தந்தமைக்காக லக்ஷ்மன் கதிர்காமர் ஸ்தாபனத்திற்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் இம் மாநாட்டில் ஆராயப்படவுள்ள விடயம் "ஜனநாயக கோட்பாடுகளுக்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு பயங்கரவாதம் விடும் சவால்" ஆகும். எனக்கு கொடுக்கப்பட்டுள்ள விடயம் பயங்கரவாதிகளை நல்வழிக்கு கொண்டு வருதலும், இலங்கை கற்க வேண்டிய படிப்பினையுமாகும். இவ்விடயம் இலங்கை சூழ்நிலைக்கேற்ப கையாள்வது இலகுவான காரியமல்ல. அது பன்முகமானதும், சிக்கலானதும், இலங்கைக்கென விசேட அம்சங்கள் கொண்டதுமாகும். ஆகவே இலங்கையின் களநிலை பற்றி விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஜனநாயக கோட்பாட்டுக்கு அமைய உருவாக்கப்பட்ட அரசுகளுக்கு மட்டுமல்ல. ஜனநாயக அடிப்படையில் அரசுகளை தெரிவு செய்வதற்கும் பயங்கரவாதம் சவாலாக அமைந்துள்ளது. அரை நூற்றாண்டுகளுக்கு மேல் அரசியலில் ஈடுபட்டு ஆறு உள்ளூராட்சி தேர்தல்களிலும் எட்டு பாராளுமன்ற தேர்தல்களிலும் ஈடுபட்டு சிலவற்றில் தோல்வியும், சிலவற்றில் வெற்றியும் கண்டுள்ளேன். இதனால் நான் பெற்ற அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பயங்கரவாத அரசியலுக்கு நானும் பலியாகியுள்ளேன். 1983ம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையில் ஒரு ஜனநாயக முறையிலான தேர்தல் நடந்ததாக நாம் தம்பட்டம் அடிக்க முடியாது.

1977ம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஐந்தில் நான்கு ஸ்தானங்களை கைப்பற்றிய தேர்தலே கடைசியாக நடைபெற்ற நீதியானதும் நியாயமானதுமான சரித்திரம் படைத்த தேர்தலாகும். எதிர்காலத்தில் எந்தவொரு கட்சியும் என்றும் அதேபோன்றதொரு அதிகப்படியான ஸ்தானங்களை கைப்பற்ற முடியாது. ஏற்கனவே மூன்றில் இரண்டு ஸ்தானங்களை பெற்று ஆட்சி நடத்திய முன்னைய அரசாங்கம் விட்ட தவறுகளை திருத்துவதற்காக இந்த பிரமாண்டமான ஆணை கிடைத்துள்ளது. முன்னைய அரசு தனக்கு கிடைத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்து சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பாக இருந்த செனட்சபை, பிரிவி கவுன்சிலுக்கு மேன் முறையீடு செய்யும் உரிமை, சட்டப்பிரிவு இல 29 ஆகியவற்றை உள்ளடக்கி இருந்த சோல்பரி அரசியல் திட்டத்தை நீக்கிவிட்டு புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கவே பயன்படுத்தப்பட்டது. புதிய அரசு மக்கள் கொடுத்த பிரமாண்டமான ஆணையை புறக்கணித்து ஒரு புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கி, அதில் மாற்றங்கள் செய்வதாயின் அத்தீர்மானம் மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்கால் நிறைவேற்றப்படுவதோடு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் உறுதிப படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் புகுத்தியிருந்தது.

அதன்படி 1977ம் ஆண்டு தொகுதி ரீதியாக இடம்பெற்ற தேர்தலில் ஆட்சிக்கு வந்த அரசு என்றும் மூன்றில் இரண்டு வாக்குகளை பெற முடியாத புதிய விகிதாசார தேர்தல் முறையை அறிமுகப்படுத்தியது. அதன்படி எதிர்கால பாராளுமன்றம் அத்தனையும் எதிர்க்கட்சியின் ஆதரவின்றி எத்தகைய மாற்றங்களையும் செய்ய முடியாத வகையில் கட்டுப்படுத்தி வைத்திருந்தது. மேலும் சர்வதேச ரீதியாக வழமையில் இருந்து வரும் சம்பிரதாயம் "ஒரு பாராளுமன்றம் எதிர்கால பாராளுமன்றத்தை கட்டுப்படுத்தும் வகையில் எத்தகைய சட்டத்தையும் நிறைவேற்ற முடியாது என்பதாகும்" அச்சம்பிரதாயத்தை மீறி 1977-1983 பாராளுமன்றம் தன்னுடைய கால எல்லையை மேலும் ஆறு வருடத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நீடித்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது மட்டும் தான் பிரித்தானிய பாராளுமன்றம், இலங்கை சட்டசபை, மேலும் பல்வேறு நாடுகளின் சட்டசபைகள் தங்கள் கால எல்லையை நீடித்தன. இதில் விதிவிலக்காக அமைந்தது இலங்கை பாராளுமன்றம் மட்டுமே 1983ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசனத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆறாவது திருத்தம் நிலைமையை மேலும் மோசமடையச் செய்தது. சர்வஜன வாக்கெடுப்பு மூலம் காலம் நீடிப்பதை எதிர்த்து நான் உட்பட பதவிகளை துறந்த தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பதினெட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் மீண்டும் பாராளுமன்றம் வருவதற்கு தடையாக இத் திருத்தம் அமைந்தது. தேர்தலில் நிற்பவர்கள் ஒரு சத்தியப் பிரமானம் செய்வதையே அத் திருத்தப் பிரேரணை கட்டாயப்படுததியது. அதன் விளைவாக அடுத்த ஆறு வருடங்கள் (1983-1989) அந்த பாராளுமன்ற உறுப்பினர்களின இடங்கள் காலியாகவே இருந்தன.

இலங்கை அரசியல் சாசனத்தின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் விளைவு தமிழ் மக்களின் தலைமை மிதவாதிகளிடமிருந்து ஆயுதக் குழுக்களுக்கு கைமாறியது. வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழர் பிரதேசங்களை ஆயுதக் குழுக்களதம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன. பலாத்காரமாக ஆட்சேர்த்தல், விரும்பி வரும் இளைஞர்களையும், மாணவர்களையும் சேர்த்தல் போன்ற சம்பவங்கள் பெருமளவில் இடம்பெற்றன. ஆட்கடத்தல், பணம் பறித்தல், கொலைகள் போன்ற சம்பவங்கள் 1980 களில் பெருமளவில் நடந்தன. இளைஞர்கள், மாணவர் தலைவர்களை இராணுவத்தினர் நியாயமற்ற முறையில் கொலை செய்தமையானது அடக்கப்பட வேண்டிய கிளர்ச்சியாளர்கள் மேலும் வலுப்பெற உதவியது. இந்திய-இலங்கை ஒபபந்தத்தை தொடர்ந்து 1987 இல் இந்திய அமைதிப்படை வருகையுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தவிர்த்து ஏனைய ஆயுதக் குழுக்கள் ஜனநாயக வழிக்கு திரும்பின.

விடுதலைப் புலிகள் அமைதி காக்கும் படையை தாக்கியது மட்டுமல்ல ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக வழிக்கு திரும்பிய அனைத்து ஆயுதக் குழுக்களையும் விரட்டியடித்தும், அழித்தும் தனிக்குழுவாக ஆதிக்கம் பெற்றது. வட மாகாணத்தில் இரண்டு மாவட்டங்களை முற்றாகவும், வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களின் ஆறு மாவட்டங்களில் சில பகுதிகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில வாழ்ந்த தமிழர்கள் பெருமளவு துன்புறுத்தப்பட்டு அடிமைகள் போல் ஆக்கப்பட்டனர். அவர்களுடைய அடிப்படை ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள் பெருமளவு மீறப்பட்டன. புலிகள் தமிழ் மக்கள் மீது அதிகாரத்தை கடுமையாக பிரயோகித்தமையினாலேயே அரசாங்கத்தால் புலிகளிடமிருந்து கிழக்கு மாகாணத்தை மீட்டெடுக்க முடிந்தது.

வட மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள எஞ்சிய பிரதேசங்களில் பெருமளவில் தமது செல்வாக்கை இழந்த நிலையில் மக்கள் அவர்களிடமிருந்து விரைவில் விடுதலை பெறுவதை வேண்டி நிற்கின்றனர். வட மாகாணத்தில் இரண்டு முழு மாவட்டங்களும், மூன்று மாவட்டங்களின் பகுதிகளும் அவர்களின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கின்றன. கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக பிரிவினை கோரிக்கையை கைவிட்டு சமஷ்டி அடிப்படையிலான ஒரு நியாயமான தீர்வை ஏற்றுக்கொள்ளுமாறு பல தடவை மன்றாடி கேட்டுள்ளேன். வடகிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கடமையில் தவறியமையால் விடுதலை புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்கின்ற பணியை நான் ஏற்றுள்ளேன். இன்னுமொரு காரணம் நான் 14 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய கிளிநொச்சி தொகுதி இன்று அவர்களுடைய முழுக்கட்டுப்பாட்டில் உள்ளது. நான் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களையும், ஏனைய தமிழ் மக்களையும் புலிகளின் அடக்குமுறைகளிலிருந்து விடுவிக்க வேண்டியது எனது கடமையாகும். பிரிவினையை கைவிட்டு ஓர் நியாயமான தீர்வை ஏற்கும் பட்சத்தில் பொது மன்னிப்பை பெற்று தருவதாக கூறியிருந்தேன். அது மட்டுமல்ல அரசு ஓர் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் பட்சத்தில் அவர்களுக்கு கூடிய பிரதிநிதித்துவத்தை பெற்றுத் தருவதாகவும் கூறியிருந்தேன். புலிகளின் தலைவர் பிரபாகரனோ அல்லது அவர் சார்பில் வேறு எவருமோ இதற்கு செவிசாய்க்கவில்லை. அதற்கு எனக்கு கிடைத்ததெல்லாம் புலிகளுக்கு சார்பான ஊடகங்கள் மூலம் அநாகரிகமான, கீழ்த்தரமான கண்டனங்கள் மட்டுமே. ஊடகங்கள் புலிகளை புகழ்ந்து மேன்மைப்படுத்துவதிலேயே இருந்தன.

கடந்த ஜுன் 22ம் திகதி மிக அன்போடு தம்பியென குறிப்பிட்டு திரு. பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில், "**குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மீதும் பொதுவாக இலங்கை மக்கள் மீதும் எனக்குள்ள அக்கறையை விளங்கிக் கொள்ளவும். நிலைமை கட்டுமீறி செல்கின்றபடியால் தயவு செய்து மிகவும் துன்பப்படும் மக்களுக்கு சமாதானத்தையும் அமைதியையும் கொடுக்கக்கூடிய பொருத்தமான நடவடிக்கையை தாமதமின்றி எடுக்கவும். இன்று இக்கட்டான சூழ்நிலையில் மக்கள் வாழ்வதற்கு முழுப் பொறுப்பையும் நீரே எடுக்க வேண்டிய காலம் வந்துள்ளது. மனதுக்கு சங்கடமாக இருந்தாலும் கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களை மறந்து இலங்கை மக்களுக்கு ஒரு சுபிட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்த பொறுப்புணர்வுடன் செயற்படும் படி கேட்டுக்கொண்டேன். சிலர் புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என முன்னிலைப்படுத்துவது போன்று நான் செய்யமாட்டேன். ஏனெனில் முக்கியமாக உமது கொடூர செயல்களால் உம்மை மக்கள் அவ்வாறு கணிக்கவில்லை. உலகிலேயே மிக கொடூரமானவன் என்ற பெயரை சம்பாதித்துள்ளீர் என்பதை நீர் நன்கு அறிவீர். மக்களுக்கு பயத்தையும், பீதியையும் ஏற்படுத்தி நாளுக்கு நாள் மிக வேகமாக உமது மதிப்பை இழநது வருகிறீர். உமது பயங்கர நடவடிக்கையால், நான் உட்பட சிலரை தவிர மற்றவர்களை மௌனிக்க வைத்துவிட்டீர். தயவு செய்து உமது பிரிவினைக் கோரிக் கையை கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு பெருமளவிலான ஆதரவை, ஆச்சரியப்படக்கூடிய வகையில், எதிர்பாராதவர்களிடமிருந்தும் பெறுவீர்.**

அவர்களை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு கொண்டுவர நாம் எடுத்த பல முயற்சிகள் தோல்வியையே கண்டன. நான் அவரை சம்மதிக்க வைக்க முயற்சித்தேன். மன்றாடி கேட்டேன், எச்சரிக்கவும் செய்தேன். ஆனால் அவருடைய மனதை எதனாலும் மாற்ற முடியவில்லை. என்னுடைய ஆலோசனையை கேட்டிருந்தால் ஒரு தீர்வோடு நாட்டு மக்கள் அமைதியாக வாழக்கூடிய ஒரு வாய்ப்பையும் போராளிகளுக்கு ஒரு நல்வழியையும் காட்டியிருப்போம். பிரிவினைக்கு பதிலாக வேறு எந்தத் தீர்வுக்கும் புலிகள் சம்மதிக்கவில்லை. தமக்கு சாதகமான ஊடகங்கள் மூலமான தனிநாட்டுக் கொள்கையையே தொடர்ந்து வற்புறுத்தி வந்தனர். அத்தோடு தாமே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்றும் தமிழர்களுக்காகப் பேசுகின்ற உரிமை தமக்கு மட்டும் தான் உண்டு என்றும் வாதாடி வந்தனர். புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அல்ல என்று இந் நாட்டில் முதலில் நிராகரித்தது நானே. இவ்வாறு நான் நிராகரித்தது அவர்களை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது.

கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கில் பெற்ற 23 ஸ்தானங்களில் 22 ஐ மோசடி மூலம் தாமே கைப்பற்றி என்னை வெற்றிகரமாக ஒதுக்கியும் விட்டார்கள். அத் தேர்தலை விடுதலைப் புலிகளே நடத்தி முடித்தனர். மாற்றுக் கட்சி வேட்பாளர்களை எதுவித பிரச்சாரத்திலும் ஈடுபடவிடாது தடுத்து விட்டனர். அவர்களின் வாக்குகளை கூட அளிக்க விடவில்லை. தேர்தல் காலத்தில் பெருந்தொகையான கள்ள வாக்குகளை செலுத்தி சண்டித்தனம், மிரட்டல் போன்றவற்றை பெருமளவில் கடைப்பிடித்தமையால் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் அத் தேர்தலை ரத்து செய்து புதிய தேர்தலொன்றை நடத்துமாறு சிபாரிசும் செய்தனர்.

### பயங்கரவாதத்தை தடுப்பதில் சர்வதேச சமூகத்தின் பங்கு

ஏதோ சில காரணங்களுக்காக சில நாடுகள் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் போது உலகிலுள்ள ஏனைய நாடுகள் அத்தனையும் வன்முறை, தீவிரவாதத்தை எதிர்த்து ஜனநாயக கோட்பாடுகளை ஆதரித்து நிற்கின்றன. அவர்கள் எந்த நாட்டிலும் பயங்கரவாதத்தை தூண்டுவதற்கு மாறாக, பயங்கரவாதிகளின் நோக்கத்தால் திருப்தியடையாது விடடால், பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு உதவுவர். சகல நாடுகளும் மனிதாபிமானத்துக்கு மதிப்பு கொடுத்து முழு மூச்சுடன் மக்களின் ஜனநாயக உரிமைகள், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் போன்றவற்றை பாதுகாக்கவே செய்வர். எது எப்படியிருப்பினும் நாம் எமது நாட்டுப் பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறை காட்டாது போனால் சர்வதேச சமூகம் ஒருதலைபட்சமாக எமது பிரச்சனை தீர்வுக்கு உதவமாட்டார்கள். எந்த நோக்கத்தோடு ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நியாயமான முறையில் தீர்க்கப்படாது இருக்கும் வேளை அந்த இயக்கத்தின் நோக்கத்தை தாமே முறியடித்தோம் என்ற வீண் பழியை எந்த நாடும் சுமக்க தயாராக இல்லை.

நான் 2006ம் ஆண்டு மே 7ம் திகதி ஜனாதிபதி அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியை கூறுவது பொருத்தமானதாக இருக்குமென நினைக்கிறேன். "**எமது இனப்பிரச்சனை தீர்வுக்கு முழு மூச்சாக உழைத்த சர்வதேச சமூகம் படிப்படியாக வெறுப்படைந்து வருவதோடு தமது முயற்சியை முற்று முழுதாக கைவிட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒவ்வொரு நாட்டுக்கும் சொந்தப் பிரச்சனைகள் பல உண்டு. ஜப்பானிய விசேட தூதுவர் அடிக்கடி நாட்டுக்கு வருவதும், சுவிஸ் அரசு எதுவித தயக்கமுமின்றி சமாதானப் பேச்சுவார்த்தையை தனது நாட்டில் நடத்த முழு ஆதரவு தெரிவித்தமையும், வேறு பல நாடுகள் வெளிபபடுத்தும் உற்சாகமும், பல்வேறு நாடுகளும் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிய வேண்டும் என்பதற்காக எதையும் செய்யத் தயாராக உள்ளதையே காட்டுகிறது. தமக்கு கிடைத்த பொன்னான இந்த வாய்ப்பை தமது அறியாமையினால் புலிகள இழந்துள்ளனர். சர்வதேச சமூகத்தின், குறிப பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் மனப் போக்கு எல்லா வேளையிலும் ஒரே மாதிரியாக இருக்குமென்று புலிகள் கருதக்கூடாது. ஆகவே அவர்கள் நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுவார்த்தையை இழுத்தடிப்பதை விட்டுவிட வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் தமது வெறுப்பை புலிகளின் பிரயாணத்தில் கட்டுப்பாடு விதித்தமை புலிகளின் செயற்பாடுகளை தாம் தொடர்ந்து சகித்துக் கொள்ள போவதில்லை என்பதறகான ஒரு சமிக்ஞையாகும். அதேபோன்று தங்களால், தமிழ் மக்களுக்கும் புலிகளுக்கும் நியாயமானதென சிபாரிசு செய்யக்கூடிய ஒரு தீர்வை அரசு முன்வைக்காத பட்சத்தில் தாம் விடுதலை புலிகளோடு கடுமையாக நடக்கப் போவதில்லை என்று இலங்கை அரசுக்கு கொடுக்கும் வேறு சமிக்ஞையும் ஆகும்".**

### பயங்கரவாதத்துக்கு பிரதேச மட்டத்திலுள்ள எதிர்ப்பு

அயல் நாடுகளுடன், பயங்கரவாதம், பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் சம்பந்தமாக மிகச் சாதுரியமாக செயற்பட வேண்டுமென்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். பிரதேச மட்டத்திலுள்ள நாடுகளுடன் எமது நாட்டுக்குள்ள நல்லுறவு, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அவர்கள் வழங்கும் ஆதரவு எமக்கு பெரும் உற்சாகத்தையும் பெரும் நிம்மதியையும் கொடுக்கிறது. எமது அயல் நாடுகள் பயங்கரவாத ஒழிப்புக்கு கொடுத்துவரும் ஆதரவை நிரூபிப்பதற்கு 07-05-2006 ஜனாதிபதிக்கு என்னால் எழுதப்பட்ட கடிதத்தின் ஒரு பகுதியை தருகின்றேன்.

"**இலங்கை அரசு எமது இனப்பிரச்சனைக்கு முன்வைக்கும் யோசனையை இந்திய அரசுக்கோ தமிழக அரசுக்கோ தெரிவிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லாத போதும், ஒரு தார்மீக கடமை அரசுக்கு உண்டு. இந்திய கடற்படையினரும், தமிழக பொலிசாரும் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி, குண்டுகள் தயாரிப்பதற்கு தேவையான வெடிமருந்து வகைகளை இலங்கைக்கு கொண்டு வந்த தமிழ் நாட்டவர்கள் சிலரையும், புலிகளையும் கைது செய்ய உதவியதை பாராட்டும் முகமாக தீர்வு சம்பந்தமாக எமது நடவடிக்கைகளை அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். தமிழக பொலிசாரும், இந்திய கடற்படையும் துரிதமாக செயற்படாது போயிருந்தால் நாம், நம் நாட்டில் பெரும் அழிவுகளை எதிர் நோக்க வேண்டியிருந்திருக்கும். இந்தியாவும், இலங்கையும் ஒருவரோடொருவர் சண்டை போடக் கூடாது என்று மகாத்மாகாந்தி கூறியதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எமது அசட்டையீனத்தால் புலிகள் மீதுள்ள பிடியை சர்வதேச சமூகம் தளர்த்த விடாது பார்த்துக் கொள்ளுங்கள். புலிகளை உரிய இடத்தில் வைக்க இந்திய அரசினுடைய, குறிப்பாக தமிழக அரசினுடைய ஆதரவு எமக்கு தேவை".**

தொடர்ச்சி -05 பக்கம்

# தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் வீ. ஆனந்தசங்கரி..........

04ம் பக்கத் தொடர்ச்சி

## பயங்கரவாதிகளை நல்வழிக்கு கொண்டுவருதல்

எதற்காக பயங்கரவாதம் உருவாகியதோ அதற்கான தீர்வை முன்வைத்த பின்பு எடுக்கப்பட வேண்டிய விடயம் இதுவாகும். தொடர்ந்து ஆட்சி புரிந்த அரசுகள் கடந்த 30 ஆண்டுகாலமாக எதுவித பொருத்தமான தீர்வையும் முன்வைக்கவில்லை. முன்வைத்த தீர்வுகள் எதுவும் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு தீர்வாக அண்மிக்கக்கூடவில்லை. மேலும் அரசு முன்வைக்கின்ற குறைந்தபட்ச தீர்வைகூட மிகப் பெரிதாக காட்டி எதிர்கட்சிகள் நிராகரித்தன. ஆட்சி மாறுகின்ற நேரத்தில் அதே நிலமை காணப்பட்டது. சில அரசியல்வாதிகள் சுயநல நோக்கத்தோடு தம் பதவி பற்றி சிந்திக்கிறார்களேயன்றி பொது மக்களுடைய கஷ்டங்கள் பற்றி சிந்திப்பதில்லை.

ஒரு சாராரால் போராளிகள் என்று வர்ணிக்கப்படுகின்ற இலங்கை பயங்கரவாதிகளின் கோரிக்கைகள் நியாயமற்றவையாக இருப்பினும் அந்த கோரிக்கைக்கு அண்மிக்கக்கூடிய ஒரு தீர்வை முன்வைக்காது அரசு நிராகரிப்பது துரதிஷ்டமானதாகும். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் சுதந்திரப் போராளிகள் அல்ல. ஏனெனில் இவர்களிடமிருந்து மக்கள் விடுவிக்கப்பட வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

பெரும்பகுதியான தமிழ் மக்கள் புலிகளின் நிலைப்பாட்டுக்கு மாறாக அரசு முன்வைக்கும் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான நியாயமான ஒரு தீர்வை ஏற்க தயாராக உள்ளனர் என்பதையும் அரசு நன்கு அறியும். நாடு சமஷ்டி ஆட்சியை ஏற்க தயராக இருந்த போதும் சமஷ்டிமுறை பிரிவினைக்கு வழிகோலும் என்ற தேவையற்ற பீதி சிலர் உள்ளத்தில் உறைந்துள்ளமை துரதிஷ்டமாகும். இன்று தமிழர்கள் நாட்டுப் பிரிவினையை முற்று முழுதாக எதிர்க்கின்றனர். இந்த நாட்டு மக்கள் எந்த தீர்வுக்கும் உடன்படாத மிகக் கொடூரமான பயங்கரவாதக் குழுவின் தஞ்சத்தில் இருப்பதால் சர்வதேச சமூகத்துக்கு ஏற்புடையதாகிய ஒரு தீர்வை முன்வைக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படுகின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒஸ்லோ உடன்பாட்டுக்கு அமைய சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை இலங்கை அரசு முன்வைக்கும் என்ற எதிர்பார்ப்போடு புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் முற்றாக தடைசெய்துள்ளது. ஒஸ்லோ உடன்பாட்டுக்கு அமைய ஓர் தீர்வு காண்பதாக ஒத்துக் கொண்ட இலங்கை அரசு தற்போது அதை செய்ய தயக்கம் காட்டினால் நிச்சயமாக தீர்வுக்காக தீவிரமாக உழைக்கும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தன் நன்மதிப்பை இழந்துவிடும்.

ஜப்பானிய விசேட தூதுவர் உட்பட, இராஜதந்திர சமூகம் தீர்வுக்காக தீவிரமாக உழைப்பதை நாம் மறந்துவிட முடியாது. இறுமாப்புக் கொண்ட, எதற்கும் இணங்காத புலிகளின் நிலைப்பாடும் அவர்களால தினமும் மேற்கொள்ளப்படும் கொலைகளும், மக்கள்படும் துன்பங்களும் என்னை 19-06-2006 இல் ஜனாதிபதிக்கு கடிதம் எழுத வைத்தது. அதில் "விடுதலைப் புலிகளின் அகங்காரம், உங்களுடைய அரசாங்கம் ஒருதலைபட்சமாக தமிழ், முஸ்லீம், மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நியாயமான தீர்வை முன் வைக்கவேண்டிய நிலையை உருவாகியுள்ளது. தாங்கள் இஷ்டப்படி செயற்பட முடியாத சில கட்டுப்பாடுகள் இருப்பதை நான் நன்கு அறிவேன். ஆனால் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இருந்த நிலைமை, கடந்த சில மாதங்களுக்குள் முற்றாக மாறிவிட்டது. உங்களுடைய கரம இன்றைய சூழ்நிலையில் கட்டுப்பட்டு இருக்கக் கூடாது என்பதை வலுவாக நம்புகிறேன். இந்த நேரத்தில்தான் தங்கள் மனசாட்சியின வழிகாட்டலில் துணிந்து ஒரு சுதந்திரமான முடிவை எடுக்க வேண்டும்"

"இக்கட்டத்தில் உங்களுடைய கொள்கையில் மாற்றம் அவசியம் என்பது தவிர்க்க முடியாததென்பதற்கு ஆதாரமாக பல விடயங்களை என்னால் கூற முடியும் என குறிப்பிட்டிருந்தேன். அக்கடிதத்தில் நான் மேலும் குறிப்பிட்டிருந்ததாவது இதுவரை காலமும் நாட்டில் நடந்தவையும், இன்று நடப்பவையும் எதுவித தாமதமுமின்றி, ஓர் உடனடித் தீர்வு முன் வைக்கப்பட வேண்டுமென்ற அவசியத்தை உணர்த்துகிறது. இரத்த ஆறு பெருக்கெடுத்தோடும் நம் நாட்டில நாம் அரசியல் இலாபம் தேட முடியாது. ஆகவே இணைத்தலைமை நாடுகள் அல்லது சமஷ்டி முறை தளைத்து நிற்கும் நாட்டுப் பிரதிநிதிகள் சிலரால் நியாயமானதும், ஏறபுடையதுமென சிபாரிசு செய்யப்படும் ஒரு தீர்வை நீங்கள் புலிகளுக்கு முன்வைக்க வேண்டும். புலிகள் எதுவித நொண்டிச் சாட்டும் கூறாமல் இருப்பதற்காகவே இந்த ஆலோசனையை நான் கூறுகிறேன். புலிகள் இந்த ஆலோசனையை ஏற்கும் பட்சத்தில் அரசு இடைக்கால நிர்வாகம் அமைக்குமாக இருப்பின் அதில் அதிகப்படியான பிரதிநிதித்துவத்தை புலிகளுக்கு வழங்குமாறு ஏனைய தமிழ் கட்சிகளை சம்மதிக்க வைக்க முடியும். ஆனால் அவர்கள் ஆயுதங்களை கைவிட்டு அவசியம் ஏற்படின் அரசின பாதுகாப்பை பெற வேண்டும். புலிகள் இப் பிரேரணையை நிராகரிக்கும் பட்சத்தில் சர்வதேச சமூகம் ஒன்று சேர்ந்து பல்வேறு தடைகள் மூலமும், வேறு வழிகளையும் உபயோகித்து அவர்களை வழிக்கு கொணடுவர வேண்டும். உங்களுடைய தீர்வு ஒஸ்லோ உடன்பாட்டுக்கு அமைவானதாக இருநதால் அதை புலிகள் நியாயப்படுத்தி நிராகாக்க முடியாது. இந்திய அரசு மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் நாட்டுப் பிரிவினையை தடுக்கவும் பயங்கரவாதத்தை ஒழிக்கவும் உறுதி பூண்டுள்ளது. இலங்கையையும் இந்தியாவையும் 28 கடல்மைல் தொலைவிலான பாக்குநீரினையே பிரிக்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டும்".

இந்தியாவின் முக்கிய அக்கறை அதன் இறைமையும் ஒருமைப்பாடுமாகும். அது பிரிவினையையும், பயங்கரவாதத்தையும் முற்று முழுதாக எதிர்க்கின்றனது. அது பெருமளவு எமது நலனிலும் பார்க்க தனது நலன் கருதியே செயற்படினும், சமஷ்டி முறை நாட்டுப் பிரிவினைக்கு வழிகோலும் என்ற அச்சம் கொண்டவர்களுக்கு இந்தியாவின் நிலைப்பாடு ஓர் உத்தரவாதமாக அமையும். இந்தியாவின் இந் நிலைப்பாடு எப்போதும் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும அது மாறாது. இந்திய அரசியல் சாசனத்தை ஒத்த ஒரு அரசியல் சாசனத்தை நாம் உருவாக்கவேண்டுமென நான் கூறுவதற்கு முக்கிய காரணம் சமஷ்டியையும், ஒற்றையாட்சி முறையையும் எதிர்ப்பவர்களுக்கு இந்திய முறை பொருத்தமானதாகும். இந்தியர்கள் வேற்றுமையில் ஒற்றுமை என்ற தத்துவத்துக்கு அமைய தமது அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டதென்று பெருமை கொள்கின்றனர்.

கொடூரமானதும், விட்டுக்கொடா தன்மையும் கொண்ட புலிகள் நாட்டுப் பிரிவினையை தவிர வேறு எந்தத் தீர்வையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே அரசு தாமதமின்றி சர்வதேச சமூகமும், சிறுபான்மையினமும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வையே முன்வைக்க வேண்டும். எதிர்கட்சியினரின் ஆதரவை பெறுவதில் அரசுக்கு எதுவித சிரமமும் இருக்காது. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளபபட்ட தீர்வை புலிகள் ஏற்குமாறு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதன் பின்புதான் பயங்கரவாதிகளை நல்வழிபடுத்துகின்ற விடயம் முக்கியத்துவம் பெறும்.

தீர்வு ஏற்பட்டதன் பின் முரண்பாட்டுக்கு காரணமாக இருந்தவர்கள் அத்தனை பேருக்கும் அரசு மன்னிப்பு வழங்க வேண்டும். பயங்கரவாதிகள் அல்லது போராளிகள் அல்லது சுதந்திர போராட்ட வீரர்கள் ஆகியவர்கள் ஆயுதங்களை கைவிட்டு தம் குழுவையும் கலைத்துவிட்டு பொது மக்களுடன் ஒன்றிணைய முயற்சிக்க வேண்டும். முன்னைய குழுவினருடன் இணையக்கூடிய வகையில் மக்களுக்கு அரசு அறிவுறுத்த வேண்டும். மக்களை பக்குவப்படுத்தி நிரந்தர அமைதிபெற அம் மக்களுடைய வாழ்க்கை தரத்தையும் உயர்த்த வேண்டும்.

பயங்கரவாதம் எதனால் உருவாகியது என்ற காரணத்தை அறிந்து மனத்தாக்கத்தை நீக்குவதற்கு, இன ஒடுக்கல், அடக்குமுறை, பாகுபாடு, மனித உரிமைகள் மறுக்கபட்டமை, போன்றவற்றை நிவர்த்தி செய்வதற்கு பின்வருன சிபாரிசு செய்யப்படுகிறது.

1. அரசு இன ஒதுக்கல் நடவடிக்கையை இல்லாமல் செய்தல். தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியும், சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியும் கட்டாயமாக போதிக்கப்பட வேண்டும்.

2. வேலைவாய்ப்பு தேடுவோருக்கு ஆரம்பத்திலேயே சிங்களம், தமிழ், ஆகிய மொழி ஆற்றலும் குறிப்பிட்ட காலத்தின் பின் இவர்கள் இரு மொழிகளிலும் முழு ஆற்றல் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

3. முடிந்தவரை அரசு சகல தொழில் வாய்ப்புக்களிலும் விகிதாரம் பேணப்பட வேண்டும்.

4. முப்படைகள், பொலிஸ் படைப்பிரிவு ஆகியவற்றில் விகிதாசாரமுறை பேணப்பட வேண்டும்.

5. தகுதி பெறும் மாணவர்களுக்கு பல்கலை கழக பிரவேசம் உறுதி செய்யப்பட வேண்டும்.

6. கடந்த 20, 30 ஆண்டுகளில் இடம்பெயர்ந்தோர் மீண்டும் தத்தம் இடங்களில் மீளக்குடியேற வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

மேலும் அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாவன.

1. வடக்கு கிழக்கு, தெற்கு-மேற்கு ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையிலான பெருந்தெருக்கள், புகையிரத வீதிப் போக்குவரத்து, விமான சேவைகள் இடம்பெறும் வகையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் காங்கேசன்துறை, பருத்தித்துறை, மன்னார், மட்டக்களப்பு துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

2. வடக்கு கிழக்கில் சர்வதேச நிதி உதவியுடன் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் வேலைவாய்ப்புக்களை வழங்கி அரசு வடக்கு கிழக்கு மக்களுக்கு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும்.

3. வடக்கு கிழக்கில் சுற்றுலா மையங்கள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். உதாரணமாக காரைநகர் கசூரினா கடற்கரை, காங்கேசன்துறை கீரிமலை, தீவுப்பகுதியில் சுற்றுலா மையங்கள், கிழக்கில் பாசிக்குடா முதலியன.

4. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வேற்றுமை இல்லாதொழிக்கப்பட்டு நாளாந்தம் ஏற்படும பாகுபாடுகளை நீக்க வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

5. அரசியல் வகுபுக்களை நடத்தி ஜனநாயக வழிமுறைக்கு திரும்புவதற்கான நடவடிக்கைகள மேற்கொள்ளல் வேண்டும்.

நாடு முழுவதும் பல்லின மக்களுடன் பழகி, நட்பு கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தல்.

1. பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்.

2. விளையாட்டு உத்தியோகத்தர்கள் மூலம் கைப்பந்து, கால்பந்து, எல்லே போன்ற விளையாட்டுக்களை இளைஞர்கள் மத்தியிலும், பாடசாலை கல்வியை விட்டு வெளியேறியவர்கள் மத்தியிலும் உற்சாகமூட்டுதல்.

3. சர்வோதய இயக்கம் மூலமாக அதன் உதவியுடன் சிங்கள, தமிழ், முஸ்லீம்கள் இணைந்து பங்கேற்கும் வகையிலான சிரமதான வேலைகள் முன்னெடுக்கப்படல்.

4. முக்கிய வழிபாட்டுத்தளங்களுக்கு நாட்டின பல பகுதிகளுக்கும் சென்றுவர ஏற்பாடுகள் செய்தல்.

5. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு விஜயம் மேற்கொள்ளல்.

இன்று இலங்கையில் விடுதலைப் புலிகள் என்னும் ஒரேயொரு பயங்கரவாத குழுவே இயங்குகிறது. அவர்களை ஒன்றுக்கொன்று வேறுபட்ட பல்வேறு குழுக்களாக பிரிக்கலாம். வயது, கல்வித்தராதரம், குடும்பஸ்த்தர்கள், புத்திசுயாதீனமற்றவர்கள். ஊனமுற்றோர்தீர்வை ஏற்றுக் கொண்டோர், ஏற்றுக் கொள்ளாதோர், பயிற்சி பெற்ற, பெறாத போராளிகள், தொண்டர்கள் ஆகியனவாகும்.

முப்பது ஆண்டுகளுக்கு மேல் இந்த இயக்கம் இயங்கியமையால் சிலர் திருமணம் செய்து பிள்ளைகளை உடையவர்களாக இருப்பர். ஒவ்வொருவருக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும். அவர்களது பிள்ளைகளுக்கான பாடசாலை வசதிகள், முன்னணி தலைவர் மட்டத்திலான போராளிகளுக்கு விரும்பினால் அவர்கள் அரசியலில் பங்குகொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். அனைத்து உதவிகளும் வழங்கி அவர்களை அவர்களுடைய குடும்பங்களுடன் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பளிக்க வேண்டும்.

வயதையும் கலவி தராதரத்தையும் பொறுத்து பல்கலைகழகம், பாடசாலை, தொழில்நுட்ப கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் சேர்வதற்கான வாய்ப்பளிக்க வேண்டும்.

திருமணம் முடித்தவர்களுக்கு வீட்டு வசதி, பிள்ளைகளின் கல்வி வசதி, மனநோயாளிகள், அங்கவீனமடைந்தோர்க்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

உளவியல் ஆலோசனை மையங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள், ஆடை தொழிற்சாலைகள், பாடசாலைகள், வீடமைப்புத் திட்டங்கள் போன்றவை தேவைக்கேற்ப ஏற்படுத்த வேண்டும்.

மீண்டும் பயங்கரவாதம் உருவாகாமல் தடுப்பதற்கு பின்வரும் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

1. போராளிகளுக்கு விரோதிகளிடமிருந்து பாதுகாப்பளித்தல்.

2. கடந்த காலத்தில் செய்த தவறுகளுக்கு பொது மக்களிடமிருந்து தண்டனை கிடைக்கலாம் என அச்சப்படுவோருக்கு பிறநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுத்தல்.

3. பதுக்கி வைத்திக்கும் ஆயுதங்களை சட்டவிரோதமாக விற்கும் முயற்சிகள் மீண்டும் ஆயுத குழுவை மீள உருவாக்கப்டுவது போன்ற தகவல் தருபவர்களுக்கு ஊக்குவிப்பு தொகை வழங்கல்.

4. குறிப்பிட்ட காலத்திற்கு ஒவ்வொருவருக்கும் அவர்கள் மீணடும் பழைய நிலைக்கு செல்வதை தடுப்பதற்கு அவர்கள் சுய தொழிலில் ஈடுபடும் வரை உதவி வழங்கல்.

5. மொத்தத்தில் எல்லோரும் பழைய நிலைக்கு மாறாமல் இருக்கும் வகையிலான சகல விதத்திலும் மத, சமூக ரீதியாக புனர்வாழ்வளித்தல்

இறுதியில் இவர்களுக்கு இவ்வாறான உதவிகள் ஏன் செய்யப்படுகிறது என்ற கேள்வி பல வசதியீனங்களுடன் வாழ்வோரிடமிருந்து வரும். அதற்கு புலிகளில் ஏறக்குறைய 20,000 பேரும், ஏனைய குழுக்களில் 20,000 பேர், அவர்களின் குடும்பத்தினர் மொத்தமாக செய்யப் போகிற உதவி பெரிய எண்ணிக்கையில் அல்ல என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

நன்றி

# மாறான விளைவை ஏற்படுத்தும் கிராமத்தின் பெயர் மாற்றம். " த.வி.கூ தலைவர் வீ.ஆனந்தசங்கரி

## மகிந்தபுரம் – யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைக்கப்பட்டு தற்போது பாவனையற்று இருக்கும் தேசிய வீடமைப்பின் திட்டத்தை திருத்தியமைத்து மகிந்தபுரம் என பெயரிட எடுத்த அமைச்சரவைத் தீர்மானம் எனக்கு ஆச்சரியத்தை கொடுக்கிறது. இம் முயற்சி புத்திசாலித்தனமற்ற, ஏற்புடையதற்ற, காலத்திற்கு ஒவ்வாத, எதிர்பார்த்ததற்கு மாறான விளைவை ஏற்படுத்தக்கூடிய செயலாகும்.

நாட்டில் அமைதியின்றி மக்கள் பயத்துடனும், பீதியுடனும் வாழ்கின்றார்கள். விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் அரசு வீதிகளின் பெயர்களையும், கிராமங்களின் பெயர்களையும் மாற்றி வருவதாக ஏற்கனவே ஒரு குற்றச்சாட்டு உண்டு. இதற்கு நாவற்குழி வீட்டுத்திட்டத்தை மகிந்தபுரம் என்று மாற்றுவதற்கு அரசாங்கத்தை குறைகூறுகின்றனர். இம் முயற்சி நாவற்குழியின் கிராமத்தின் பெயரையும், நாவற்குழி புகையிரத நிலையத்தின் பெயரையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படலாம். நாடு குறிப்பாக யாழ்ப்பாணம் அனைவரும் ஏற்றுக்கொள்ளகூடிய நியாயமான தீர்வு இனப்பிரச்சனைக்கு ஏற்பட்டதும் ஜனாதிபதியின் பெயரில் ஒரு தகுதியான நினைவுச் சின்னத்தை அமைக்க காத்திருக்கிறது.

கைவிடப்பட்ட ஒரு திட்டத்திற்கு மகிந்தபுரம் என்ற பெயரை சூட்டுவது கேலிக்கூத்தல்ல ஒரு நாட்டின் தலைவருக்கு கொடுக்கப்படும் பெரும் கௌரவம் என ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி அவர்களுக்கு முழு மரியாதை கொடுக்கும் இம் முயற்சி எதிர்பார்ப்புக்களுக்கு மாறான விளைவையே ஏற்படுத்தும் என்பதோடு அவசியம் ஏற்படின் முற்று முழுதான ஒரு புதிய திட்டத்தை உருவாக்குவதே சிறந்ததென கருதுகிறேன்.

# இளம் தலைமுறையின் அழிவால் எனது மனம் வேதனையில் வெந்து போகிறது

50 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்தவை எனது வாழ்வும் அனுபவங்களும். எமது மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக சிறந்ததொரு எதிர்காலத்துக்காக காலத்திற்கு ஏற்ப நான் பணியாற்றி வந்திருக்கிறேன்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், இந்நாட்டு மக்களின் நல் வாழ்வுக்காகவும் உறுதியுடனும் நேர்மையுடனும் செயற்பட்டு வந்திருக்கிறேன். சில தரங்கெட்டவர்களின் மட்டரகமான அவதூறுகள் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது. அவர்களது மட்டரக அளவுகோல்கள் தராதரங்கள் அவர்களுக்கே உரியவை. எனது பாதை தெளிவானது. அதில் தொடர்ந்து நான் சென்று கொண்டிருப்பேன்.

கடநத 25 ஆண்டுகளில் என்னை மிகவும் வருத்துவதாகவும், துன்புறுத்துவதாகவும் அமைவது எமது இளம் தலைமுறையினரின் அழிவு. இந்த அழிவு எந்த வழியிலாவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அகிம்சையின் பாதையில், மகாத்மா காந்தி அவர்களின் வழிமுறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவன் நான் எமது சமூகத்தில் இளம் சந்ததியினர் நாளும் பொழுதும் அழிந்து கொண்டிருப்பதை பார்க்கும் போது என் மனம் வேதனையில் வெந்து போகிறது.

எமது இளம் சந்ததியே அற்றுப் போய்விடுமோ என அச்சம் ஏற்படுகிறது. மரணத்தை கொண்டாடும் ஒரு காட்டுமிராண்டி நிலை தமிழர்கள் மத்தியல் உருவாகியிருக்கிறது. தம்பி பிரபாகரன் வருடாவருடம் நவம்பர் மாதத்தில் மரணத்துக்கு விழா எடுக்கிறார்.

அவர் பல ஆயிரக்கணக்கானோரின் மரணத்துக்கு பொறுப்பாளியாகவும், பதில் சொல்ல வேண்டியவராகவும் இருக்கிறார். மனித உயிர் பெறுமதியற்றது அதனை பறித்தெடுப்பதற்கான ஏக உரிமை தனதென்று கருதி கொண்டு அகங்காரமாக வாழ்கின்றார்.

அவரால் தவறாக வழிநடத்தப்பட்டு கொல்லப்பட்ட இளைஞர்கள், யுவதிகள், சிறுவர் சிறுமியரின் நடுகற்களில் பெற்றோர்களும், மனைவயரும், உற்ற சுற்றத்தவரும கண்ணீர் சிந்தி கதறியழும் காட்சி பிரபாகரன் உட்பட புலிகளின் தலைவர்களுக்கு உவப்பாக இருப்பது எனக்கு மிகுந்த வேதனையளிக்கிறது.

எமது மக்களுக்கு நம்பிக்கையான, பாதுகாப்பான அழிவுகள் அனர்த்தங்கள் இல்லாத எதிர்காலமொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும். சமூகத்தின் ஒட்டுமொத்த மரணத்துக்கான பாதைகளை நிராகரித்து வாழ்விற்கான பாதையை செப்பனிடுவோம்.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ

# மனிதத்தை உயர்த்திப் பிடிக்கும் புதிய பண்பாட்டை எமது சமூகத்தில் உள்வாங்க வேண்டும்

வருடா வருடம் நவம்பர் மாதத்தில் புலிகள் மரண மகிழ்வு விழா நடாத்துகிறார்கள். உலகில் சமகாலத்தில் மரணத்தை கொண்டாடுவது இவர்களாத்தான் இருக்கும்.

உலகில் போராட்டங்கள், எழுச்சிகள் மனித குலத்தின் விடிவிற்காகவே நடத்தப்பட்டிருக்கின்றன. இதுவரையிலான அத்தகைய நிகழ்வுகள் யாவும் மனித வாழ்வை செம்மைப்படுத்தி வந்திருக்கின்றன.

விதிவிலக்குகளாக சமூகத்தை காட்டுமிராண்டி நிலைக்கு இட்டுச் செல்லும் நிகழ்ச்சிகளும் வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. ஜெங்கிஸ்கான், ஹிட்லர், முசோலினி, பொல்பொட் போன்றோர் இந்த ரகத்தினரே.

நீதியான தார்மீக வலுவுள்ள சமூக கனவுகளுடன் போராட புறப்பட்டவர்கள் தமிழ் பாசிசத்தினால் ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னொருபுறம் இளைஞர்கள், பெண்கள், சிறுவர் சிறுமியர் என பலர் தவறாக வழிநடத்தப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கையின் அர்த்தங்கள் நாசமாக்கப்பட்டன. இளம் கனவுகள் பறித்தெடுக்கப்பட்டன,

மனிதத்தை உயர்த்திப் பிடிக்கும் புதிய பண்பாட்டை எமது சமூகத்தில் உள்வாங்க வேண்டும். அதுவே எம் முன்னுள்ள பிரதான பணியாக இருக்கிறது.

நாம் இத்தருணத்தில் தார்மீக உணர்வுகளுடன் போராடி மரணித்தவர்கள், தவறாக வழிநடத்தப்பட்டு பலியாக்கப்பட்டவர்கள் அப்பாவி பொது மக்கள் அனைவரையும் இன, மத, பால், வேறுபாடின்றி நினைவு கூர வேண்டும். இந்த பல்லாயிரக் கணக்கான மரணங்கள் எத்தகைய பாரிய இழப்புக்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்து பார்க்க வேண்டும் இளைய தலை முறை எமது சமூகத்தில் பாரியளவில் அழிக்கப்பட்டிருக்கிறது. முதலும் முக்கியமுமாக இதுபற்றிய விழிப்புணர்ச்சி எமக்கு அவசியம்.

சமாதானமும், ஜனநாயகமும், மனித உரிமையை பேணுகையும், ஐக்கியமும் நிலவும் சூழ்நிலையொன்றை நிர்மாணிக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

எமது மக்களுக்கு மகிழ்வும் சுதந்திரமும் சுபிட்சமுமான எதிர்காலம் எமது கனவாக இருக்க வேண்டும்.

எமது சமூகத்தின் ஒட்டுமொத்த மரணம் அல்ல.

தி. ஸ்ரீதரன்
பொதுச்செயலாளர்
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா


# வாசகர்களுடன் ஒரு நிமிடம்

உங்களிடம் ஏற்கனவே தம்பி மாவை சேனாதிராஜாவின் பதவி மோகத்தைப் பற்றி ஓரளவு குறிப்பிட்டிருந்தேன். ஒருவாறு அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் மறைவோடு அவின் வெற்றிடத்திற்கு மாவையை நானே முன்னின்று பலரின் எதிர்புக்களுக்கு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினராக்கி அவின் ஆசையை நிறைவேற்றினேன். அடுத்த தேர்தலிலும் இவரின் பதவி ஆசை இவரை விடவில்லை. அந்தத் தேர்தலில் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரானார். அவரின் படுகொலையின் பின் அவரின் அந்த இடத்திற்கு பல தகுதியானவர்கள் கண் வைத்திருந்தும் தம்பி மாவை சோனாதிராசாவை நானே முன்னின்று பாராளுமன்ற உறுப்பினராக்கினேன். இவ்வாறு சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருநதாலும் அவருக்கு எப்போதும் கட்சியின் தலைமை பதவி மீதும் ஒரு கண் இருந்ததை பிற்காலத்தில் அவரது நடவடிக்கைகள் மூலம் கண்டு கொண்டோம்.

2000ம் ஆண்டு தேர்தலில் நான் முதன்மை வேட்பாளராக போட்டியிட்டு வென்றேன். அதிலும் முதன்மை வேடபாளராக தனது பெயரையே நியமிக்க வேண்டுமென கோரினார். அக்காலகட்டத்தில் என்னை விட அதிகமாக வாக்குகள் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படுவதாக என்னிடம் எல்லோரும் வந்து சொன்னார்கள். இருந்தும் நான் அந்தத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று முதன்மை பாராளுமன்ற உறுப்பினரானேன். பின்னர் எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பினை உருவாக்கி 2001ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டோம். எமது கட்சி எத்தனையோ பெருந் தலைவர்களையெல்லாம் விடுதலைப் புலிகளின் கொலை வெறிக்கு பலி கொடுத்திருந்தும் தமிழ மக்கள் நலன் கருதி எல்லாவற்றையும மறந்து விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து இனப பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கில் அனைவிடமும் இணைந்து அத் தேர்தலில் போட்டியிட்டோம். அந்த தேர்தலிலும் நானே முதன்மை வேட்பாளராக போட்டியட்டேன். அந்த தேர்தலிலும் தம்பி மாவை என்னை விட அதிகம் வாக்குகளை பெற வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டார். இருந்தும் அவரது எண்ணம் ஈடேறவில்லை. அதிலும் நான் மற்றெல்லோரையும் விட 36,000 வாக்குகளை பெற்று முதன்மை பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானேன். அந்தத் தேர்தலில் தேசிய பட்டியலில் தலைவர் அமரர் சிவசிதம்பரம் அவர்களும் உடுவில் முத்துலிங்கம் அவர்களையும் கட்சி ஏற்கனவே தீர்மானித்திருந்தது. தேசிய பட்டியியலில் எமக்கு ஒரு இடம் மட்டுமே இருந்தபடியால் தலைவர் அமரர் சிவசிதம்பரம் அவர்கள் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார். இந்த வேளை தம்பி மாவை விடு தலைப் புலிகளின் நெருங்கிய நண் பராக மாறிவிட்டார். என்னைப்பற்றி தவறான கருத்துக்களை விடுதலைப் புலிகள் மத்தியில் பரவ விட்டார். இந்த சூழ்நிலையில் தலைவர் சிவா ஐயா அவர்களின் மறைவு ஏற்பட்டது. அவரை நாங்கள் யாழ் நகருக்கு கொண்டு சென்று அஞ்சலி செலுத்தினோம். அவரின் மறைவையடுத்து அப்பதவி வெற்றிடமாக இருந்தது. அந்த வெற்றிடத்துக்கு கட்சி ஏற்கனவே திரு முத்துலிங்கம் அவர்களை நியமிக்க தீர்மானித்திருந்தது. அந்தவேளையில்......

தொடரும்

# இளைய தலை முறைக்கு



## நாச சக்திகளில் சிக்கி இன அழிவைத் தேடாதீர்.

தமிழ் இனத்தின் ஒற்றுமையைக் குலைத்து இளைஞர் சக்தியை எமக்கெதிராகத் திசை திருப்பி தமிழினத்தை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்வதற்குப் பல முனைகளிலும் நின்று நாசகார சக்திகள் இயங்கி வருகின்றன. இவைபற்றி மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் அன்று ஒரு காலத்தில் ஒருவரை ஒருவர் திட்டித் திட்டிப் பேசியே அரசியல் நடத்தி வந்தோம். பின்னர் தமிழினத்திற்கு ஏற்படும் பயங்கர விளைவுகளை சிந்திக்கத் தொடங்கினோம் இதன் விளைவாக பிளவுபட்ட தமிழர் சமுதாயத்தை ஒன்றுபடுத்தி ஒரே அணியில் திரட்டினோம். இதன் மூலம் அவ்வப்போது எமககெதிராகக் கட்டவிழ்தது விடப்படும அநீதிகளுக்கு எதிராகப் போர்க்குரல் எழுப்பினோம். இதனால் அரசாங்கம் எமது பிரச்சனைகளை அணுகி முகம் கொடுப்பதற்கு முன்வந்தது. மீண்டும் இப்போது தமிழ் இனத்தின் ஒற்றுமையை குலைத்து தமிழினத்தின் விடிவுக்காக நாம் எடுத்துவரும் நடவடிக்கைகளை முறியடித்து இளைஞர்களை எம்மிடமிருந்து பிரித்தெடுத்து அவரவர்களை எமக்கெதிராக ஏவி விட்டு அதன் மூலம் தமிழினத்தை அழிவப் பாதைக்கே அழைத்துச் செல்வதற்கான முயற்சியில் சிலர் ஈடுபட்டனர். இவர்களின் செயல்களை இனியும் நாம் அனுமதிக்க முடியாது. இதை எப்படியாவது தடுத்தேயாக வேண்டும். இல்லாவிட்டால் மாற்றுக் கட்சியினர் எமது தமிழினத்தின் மீது வண்டி ஓட்டிச் செல்வதற்கு நாம் இடமளித்தவர்களாவோம்.

இளைஞர்களின் சக்தி வேகமாக பாய்ந்தோடும் ஆற்றைப் போன்றது. இந்த ஆறு காட்டிலே ஓடுமானல் அதனால் ஒரு பயனுமே ஏற்படப் போவதில்லை. வேகமாக ஓடிச் செல்லும் ஆற்றை மண் அணைபோட்டு, வாய்க்கால்கள் அமைத்து நீண்ட தூரத்திற்கு அந்த நீரை ஓட்டிச் சென்று செழித்துப் பயன்தரககூடிய பயிரை வளர்க்க வேண்டும்.

பயிர் செழிப்பதால் நாடும் மக்களும் சுபீட்சமடையவர். நாமும் எமது இளைஞர்களின் வேகமாகப் பாய்ந்து செல்லும் சக்தியைப் பல திசைகளிலும் சென்று சிதைந்து போய் விடாமல் அணைபோட்டு, வாய்க்கால்கள் அமைத்து மிகக் கட்டுக்கோப்பான முறையில் எமது மக்களின் சுபீட்ச வாழ்வுக்காகப் பயன்படுத்தலாம். இதற்காக எத்தனையோ இன்னல்களின மத்தியிலும் தியாகங்களைச் செய்தோம். ஆனால் இன்று எம் கண் முன்னேயே அவர்களின் வேகமாகப் பாய்ந்து செல்லும் சக்தி, சென்று கொண்டிருந்த பாதையை உடைத்த பல திசைகளாகப் பாய்ந்தோட முற்பட்டுள்ளது. இதனால் யாது நடக்கும்?

உடைப்பெடுத்து ஓடும் ஆறு அக்கம் பக்கத்திலேயுள்ள குடிமனைகள் எல்லாவற்றையும் அடித்துப் புரட்டிக் கொண்டு எவ்வளவோ அழிவுகளையெல்லாம் ஏற்படுத்துகமோ அதேபோலவே பல திசைகளிலும் சென்று கொண்டிருக்கும் இளைஞர் சக்தியும் இனத்துக்கும் பேராபத்து ஏற்படுத்திவிடும்.

எனவேதான் திசைமாறிச் செல்லும் இளைஞர் சக்தியால் பெரும் அபாயகரமான நிலை ஏற்படும் என்பதை வழி தவறிச் செல்லும் இளைஞர்களுக்கு கூறிவைக்க விரும:புகின்றேன்.

நாம் கட்டிக்காத்த ஒற்றுமையை எந்தவொரு நாசகார சக்தியும் அழித்து விடுவதற்கு இடமளியாதீர்கள்.

## ஆயுத பலத்தின் இறுதி முடிவென்ன?

நாம் சுதந்திர இனமாக வாழ்வதற்கு எம்மிடையே உள்ள பேத உணர்வுகள் அகன்று ஒற்றுமை பலமடைய வேண்டும். சமூக ரீதியில் மட்டுமன்றி அரசியல் ரீதியிலும் நாம் கூறுபோடப்படும் கவலைக்குரிய நிலைகள் உருவாகி விட்டன. இதனையிட்டு மனம் வருந்தாமல் இருக்க முடியாது. தீவிர வாதம், மிதவாதம் இவையெல்லாம் வேண்டப்படாதவை. எமக்கு வேண்டியது இன ஒற்றுமையே. தீய சக்திகள் எம் மத்தியில் ஊடுருவல் செய்துள்ளன. எமது ஒற்றுமையைச் சிதறடிக்க அவை பிரயத்தனம் செய்து வருகின்றன. இத்தகைய தீய சக்திகளின் முயற்சியைத் தோல்வியடையச் செய்ய வேண்டும். தமிழன் தமிழனாகவே உயிர் விட வேண்டும்.

நம்மை நாமே அழித்துக் கொள்ளும ஒரு பயங்கர விரும்பத்தகாத நிலை உருவாகியுள்ளது. இராணுவமோ பொலிசோ ஒருவரை சுட்டுவிட்டால் பதறும் பதட்டமடையும் நாம் இன்றைய நிலைபற்றி நிச்சயம் சிந்தித்தேயாக வேண்டும்.

ஆயுத பலத்தை நம்பியவர்கள் அடிச்சுவடே இல்லாது ஒழிந்துபோன நிலையைச் சரித்திரம் காட்டுகிறது. ஆயுதத்தைவிட ஒற்றுமை சக்தி வாய்ந்தது.

நாம் அகிம்சையில் நம்பிக்கையுடையவர்கள். மகாத்மாவால் கையாளப்பட்ட அகிம்சை ஆத்மீகத்தை அடிப படையாகக் கொண்டது.அதைவிட சக்திவாய்நத ஆயுதம் வேறு கிடையாது.

அன்பு மூலம் அகிம்சை வழியில் சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றி ஒரே அணியாகத் திரண்டு குரல் கொடுக்க உழைக்க வேண்டும்.

இலட்சிய இதயங்களோ.....
என்ற நூலில் - அ.அமிர்தலிங்கம்

# மனித நாகரீகத்திற்கும் கண்ணியத்திற்கும் பெரும் சவால் பேராசிரியரின் படுகொலை -த.வி.கூ தலைவர் வீ. ஆனந்தசங்கரி

யாழ் பலகலைகழக கணித பேராசிரியர் பொன்னையா மகினன் பம்பலபிட்டி கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டது மானிட நேயம் கொண்டவர்கள் அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது. போராசிரியர் மகினன் எந்தவொரு சர்ச்சையிலும் சிக்கிக் கொள்ளாதவர். தனது துறைசார் பணியிலேயே அவர் கண்ணும் கருத்துமாக இருந்தவர். க.பொ.த உயர்தர பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணிக்காகவே அவர் கொழும்பு வந்திருந்தார். அவர் பணி முடிந்து யாழ்ப்பாணம திரும்ப இருந்த சமயத்திலேயே படுகொலை செய்யப்பட்டு பம்பலப்பிட்டி கடற்கரையில் சடலமாக வீசப்பட்டிருநதார்.

இத்தகைய படுகொலைகள் மனித நாகரீகத்திற்கும் கண்ணியத்திற்கும் பெரும் சவாலாக அமைகின்றன. இந்த படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.


இத்தகைய கொடூரமான சம்பவங்கள் அலட்சியப்படுத்தப்பட்டால் நீதி, சட்டம பற்றிய நம்பிக்கைகள் சமூகத்தில் அற்றுப் போய்விடும் மனித உயிருக்கு எந்தவித பெறுமதியுமற்ற இந்த அவல நிலை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொளகிறோம்.

வீ. ஆனந்தசங்கரி
த.வி.கூ - தலைவர்



# வாழ்க்கையை கொண்டாடுவோம்
# நவம்பர் 19 தோழர் பத்மநாபா பிறந்த நாள்.



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணின் பெருமைக்குரிய செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா அவர்களின் பிறந்ததினம இன்றாகும். தோழர் பத்மநாபா வும் பன்னிரண்டு தோழர்களும் தமிழக மண்ணில் படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூர்ந்த ராஜீவ்காந்தி அவர்கள் தனது தாயார் இந்திரா காந்தி அவர்களும் தோழர் பத்மநாபா அவர்களும் ஒரே தினத் தில்தான் பிறந்தவர்கள். ஒரே விதமான இலட்சியங்களுக்காக போராடி மரணித்த வர்கள் என தனது இரங்கல் குறிப்பில் குறிப்பிட்டிருந்தார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரம், சர்வதேச சகோதரத்துவம் நவ காலனித்து வத்துக்கு எதிரான போராட்டம் ஆகிய வற்றை வரிந்து கொண்டவர் அவர். இலங்கையில் தமிழர்களின் உரிமைகளுக் காகவும் சமூகங்களிடையே சகோதரத்து வத்துக்காகவும், சமூக மாற்றத்துக்காகவும் உழைத்தவர் அவர். சகல விதமான அடிமைத்தனங்களையும் அவர் எதிர்த்தவர். நீதியான சமூக அமைப்பை, பாரபட்சமற்ற சமூக அமைப்பை அவர் வேண்டி நின்றவர்.

இந்த உயரிய இலட்சியங்களுக்காக 70 களின் முற்பகுதியில் இருந்து 1990ல் அவர் படுகொலை செய்யப்படும் வரை அல்லும் பகலும் அயராது உழைத்தவர். முப்புத் தொன்பது வருடங்களில் இந்த உலகில் வாழக்கிடைத்த சந்தர்ப்பத்தில் 20 வருடங் களை தனது சமூகத்திற்காக, மானிடத்தின் விடிவிற்காக அர்ப்பணித்திருந்தவர்.

எமது சமூகத்தில், எமது நாட்டில் பல்லாயிரக்கணக்கான இளந்தலைமுறை யினர் அகாலமாக படுகொலை செய்யப் பட்டதைப் போன்றே அவரும் படுகொலை செய்யப்பட்டார். ஒரு விடயத்தை இங்கு நாம் ஊன்றி கவனிக்க வேண்டும். சமூக நீதி தொடர்பான அக்கறையும், ஆவேசமும் கொண்ட இளந்தலைமுறையொன்று கடந்து வந்த கால் நூற்றாண்டு களில் அழிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பல்வேறு சமூக விடுதலை இயக்கங்களைச் சார்ந்தவர்களாகவும் மனித உரிமை அமைப்புக்களைச் சார்ந்தவர்களாகவும், அகிம்சை, சகிப்புத்தன்மை என்பவற்றில் நம்பிக்கைக் கொண்ட தலைவர்களாகவும் தீர்க்கதரிசனமும் ஆளுமையும் கொண்ட புத்திஜீவிகளாகவும் சாதாரண சராசரி மாந்தர் களாகவும் இருந்திருக்கிறார்கள். எத்தகைய பெரிய ஆற்றல் அழிக்கப்பட்டிரு க்கிறது என ஆழமாக சிந்தித்தோமேயானால் எமக்கு பேரதிர்ச்சி ஏற்படும். இதில் தமிழர் கள் மாத்திரமல்ல சிங்களவர்கள், முஸ்லீம் களும் அடக்கம்.

"நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ" என்ற பாரதியின் வரிகளை நினைவுறுத்தும் விதமாக "கண்களை விற்று சித்திரம் வாங்கும்" குரூர பைத்தியக்காரத்தனத்தை நினைவுறுத்தும் விதமாக இங்கு இளந்தலை முறை வீழ்த்தப்பட்டிருக்கிறது. இந்த இளம் தலைமுறையினர் நியாய உணர்வு கொண்ட வர்கள். அவர்கள் அஞ்சா நெஞ்சம் கொண்ட வர்கள். அவர்களுடைய உழைப்புக்கள், அர்ப்பணங்கள் எல்லாமே இங்கு விரயமாக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் பாசிசம் தேசிய விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தது மாத்திரமல்லாமல், இளந்தலைமுறையினரின் பேரழிவுக்கும் வழிவகுத்தது என்றால் அது மிகையல்ல.

உன்னதமான இலட்சியங்களுக்காக போராடிய மனிதர்கள் மாத்திரமல்ல தவறாக வழிநடத்தப்பட்டு நடுகற்களாக மாற்றப்பட்ட வர்களையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நினைவுகூர வேண்டும்.

மனித வாழ்வு என்பது மிக குறுகிய காலம். ஆனால் அந்த குறுகிய காலத்தில் அர்த்தபூர்வமான வாழ்க்கை வாழ்வதற்கு ஆக்கபூர்வமான சாதனைகள் செய்வதற்கு இடமளிக்காமல் தவறாக வழிநடத்தப்பட்டு குறுகிய காலத்தில் வாழ்வு அழிக்கப்பட்ட வர்களின் மரணம் அவலமானது.

மனித நாகரீகத்திலும், மனித குல ஐக்கியத்திலும், மனித குலத்தின் எதிர்காலத் திலும் நம்பிக்கையுடையவர்கள் "மரணங்கள் மலிந்த பூமி" என்ற நிலையிலிருந்து எமது தேசத்தை விடுவிக்க தம்மை அர்ப்பணிக்க வேண்டும் காந்தியடிகளின் கொல்லாமை, அன்பு, அகிம்சை என்ற உயரிய கோட் பாடுகளை, விழுமியங்களை எமது சமு கத்தில் நிலை நிறுத்த இந்த அவல மான வரலாற்று காலகட்டத்தில் நாம் பாடுபடவேண்டும்.

நாம் எதனை எல்லாம் இழந்து விட்டோம், எதனையெல்லாம் இழந்து கொண்டிருக்கிறோம் என்பதை ஓய்வில் லாமல் எம் மனக்கண்ணில் நிலை நிறுத்த வேண்டும். தனது பிள்ளை கற்க வேண்டும், வையத்துள் வாழ் வாங்கு வாழவேண்டும், தார்மீக நியாய உணர்வு கொண்ட பிள்ளையாக வளர வேண்டும் என்றே பெற்றவர்கள் கனவு காண்பார்கள். எமது சமூகத்தில் எத்தனை ஆயிரம் கனவுகள் நொறுங் கிப் போயின. இந்த கனவுகள் சுமந்த நெஞ்சங்கள் இன்று தாங்கொணா துயர சுமைகளை தாங்கி நிற்கின்றன. வெறுமை, சூனியம் என்பன அவர்களின் மனதை நிறைத்திருக்கின்றன. யுத்தம் ஈவிரக்கமற்ற வன்முறைகள் மாத்திரமல்ல இயற்கையும் தன் பங்கிற்கு அள்ளிச் சென்று விட்டது. ஒரு மனிதனின் அவதா ரம் என்பது எவ்வளவு மகத்தான விடயம்.

வள்ளுவரின் இரு வரிக் கவிதைகள் "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்ம கனை சான்றோன் எனக் கேட்ட தாய்" என்கிறது தன்மகன் சான்றோன் என அறியும் போது அவனைப் பெற்ற பொழு தைவிட தாய் பெரிதும் மகிழ்வாள் என்கிறது. ஆனால் பிள்ளைகளை இழந்த பெற்றோரின், மனைவியரின், கணவர்களின், உற்ற சுற்றத்தின் பெரு மூச்சுக்கள் எமது தேசத்தின் காற்றை வெப்பமாக்கியிருக் கின்றன.

இன்று உலகளாவிய அளவிலும் மனிதர் கள் அன்றாடம் கொல்லப்படுவதென்பது இயல்பான விடயமாகி வருகிறது. நவீன காட்டுமிராண்டி நிலையை நோக்கி உலகம் சிதைந்து கொண்டிருக்கிறது ஊரளவில் மாத்திரமல்ல, உலகளவிலும் இது பற்றிய விழிப்புணர்ச்சி அவசியமாகிறது.

மனிதன் வாழும் உலகின் இயற்கைச் சூழலை பாதுகாப்பதற்கான ஆபிரிக்க பெண்மணி வங்கரிமாதாவின் விழிப்புணர்ச்சி செயற்பாடுகள் உலகளாவியளவில் விதந்துரைக்கப்பட்டன. அதற்கான நோபல் பரிசையும் அவர் பெற்றிருந்தார்.

விலை மதிப்பற்ற மனித உயிர்களின் மாண்பை உயர்த்திப் பிடிப்பதற்கு ஒரு பிரமாண்டமான விழிப்புணர்ச்சி இயக்கம் தேவை.

தமது பிள்ளைகள் கற்க வேண்டும், எதிர்காலத்தில் சகல சௌபாக்கியங்கங் களுடனும் வாழ வேண்டும் என கண் துஞ்சாது அல்லும் பகலும் அயராது பாடுபடும் புலம் பெயர் சமூகத்தின் பெற் றோர்கள் ஒரு கணமேனும் அவர்களின் தாயகத்தில் அன்றாடம் கொல்லப்படுபவர் களை பற்றி மரணத்தை எதிர்நோக்கி இருப்பவர்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். வாழ்க்கை அழகிய ஓவியம் போன்றது. அதன் மீது இரத்தத்தை தெளித்து அழகு பார்க்கும் குரூர ரசனை எமக்கு வேண்டாம். மரணத்தை வழிபடும் காட்டுமிராண்டி கலாச்சாரம் எமக்கு வேண்டாம்.

வருடா வருடம் நவம்பர் மாதம் கடைசி வாரம் மரணத்தை மகிழும் ஊளித்தாண்ட வம் எமது சமூகத்தில் விளைந்துவிட்ட பாசிசத்தினால் நிகழ்த்தப்படுகிறது.


நவ உலகின் மனிதர்களான எமக்கு இது வேண்டாம். "பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல்ல" இது எமக்கு வேண்டாம்.

மனிதத்தின் அவதாரத்தின் வாசனை, ஜனனத்தின் வாசனை, உயிர்ப்பின் வாசனை, வளர்ச்சியின் அதிர்வுகள் இவையே எமக்கு வேண்டும். நாம் வாழ்க்கையை கொண்டாடுவோம்.

தோழர் பத்மநாபா அவர்களின் - அன்னை இந்திராகாந்தி அவர்களின் பிறந்த தினத்தில் நாம் சொல்ல விளைந்த செய்தி இதுதான்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணி- பத்மநாபா

## ஆலால எம் நினைவுகளில்



ஆலாலசுந்தரம்

சிறந்த பேச்சாற்றல் கொண்டவரும் இளைஞர்கள் மத்தியில் அடலேறு ஆலாலசுந்தரம் என்று அன்பாக அழைக்கப்பட்ட நண்பன் ஆலால் அவர்களின் மறைவும் என்னை பெரிதும் பாதித்த விடயங்களில் ஒன்று. 1970 களில் நானும் நண்பன் ஆலால் ஒருவரையொருவர் எதிர்த்து கிளிநொச்சி தொகுதியில் போட்டியிட்டோம். பின்னாளில் தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமாகியவுடன் நாம் அனைவரும் ஒன்றிணைந்து மிக நெருக்கமாக செயற்பட்டோம். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் என்பதை அப்போதுதான் நான் தெரிந்து கொண்டேன். நல்ல பண்பாளன் எதிரி எனப் பராது எவருக்கும் உதவும் நல்ல உள்ளம் கொண்டவர். எத்தகையான கொடூரமான முறையில் அவர் கொல்லப்பட்டார் என்பதை எல்லோரும் அறிவார்கள். தமிழ் இளைஞர்கள் மத்தியில் இந்த கொடூரமான குணம் எவ்வாறு வந்தது என்பதே நம் எல்லோரினதும் விசனமாகும். ஏன்ன தவறு செய்தார்? ஏன் இப்படி செய்கிறீர்கள்? கிளிநொச்சித் தொகுதியை அவரும் நன்கு அறிந்து வைத்திருந்தார். என்னுடைய நண்பர்கள் அனைவருமே அவருக்கு மிகவும் நெருக்கமான நண்பர்களாகவே இருந்தனர். அவ்வாறு மிகவும் இனிமையாக பழகிய அவரின் இழப்பும் தமிழினத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

## உண்மையான ......

02ம் பக்கத் தொடர்ச்சி

உண்மைஎன்று தெரிவதற்கில்லை யாதலால்) பரஸ்பரம் சகிப்புத்தன்மை யே நாம் பின்பற்ற வேண்டும் என்பது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விதியாகும். எல்லோருக்கும மனசாட்சி என்பதும் ஒன்று போல இல்லை. எனவே, தனி நபரை வழிநட த்த அது நல்லதோர் விதிமுறையாக இருப்பினும், ஒருவரின் மனச்சான்றை மற்ற எல்லோர் மீதும் திணிப்பது, மற்ற வர்களின் சுதந்திரபூர்வமான மனசாட்சி மீது தாங்க முடியாத குறுக்கீடு செய் வதாகும்.

யங் இந்தியா. 239-1926.
பக் 334

கருத்து வேறுபாடுகளை ஒருக்காலும் பகைமை எனக் கொள்ளலாகாது. அவ்வாறில்லை எனின், நானும் எனது மனைவியும் ஒருவருக்கொருவர் பரம விரோதிகள் என்றாகி விடுவோம்! இந்த உலகில் கருத்து வேறுபாடு அற்ற இரண்டு நபர்களை நான் கண்டதில்லை. கீதையைப் பின்பற்றி நடப்பவனான நான், எனக்குப் பிரியமான நெருங்கிய உறவினர்களுடன் எவ்வளவு அன்பு கொண்டிருப்பேனோ அதே அன்பை என்னுடன் மாறுபட்ட கருத்துக் கொ ண்டவர்களிடம் சொரிய எப்பொழுது மே நான் முயற்சித்து வந்துள்ளேன்.

யங் இந்தியா. 17-3-197.
பக். 82

## ஊர்கூடி தேர் இழுப்போம்

சத்தியமும் சங்கரியும் ஒன்றென்பதால்தான்
சத்தியத்திற்கும் சோதனை சங்கரிக்கும் சோதனை
சோதனைகளையும் வேதனைகளையும்
சாதனைகளாக்கிக் காட்டியவன் நீ

அன்றே சொல்லிவிட்டாய் அவர்களுக்கு
நாம் உந்து சக்தியாய் செயற்படுவோம் என்று
அன்றே நீ சொன்னதை நன்றாய் சிந்தித்திருந்தால்
என்றோ பெற்றிருப்போம் எமது உரிமைதனை

அன்று ஏறவில்லை எவரின் காதிலும்
இன்றேனும் ஏறுமா அவர்களின் காதில் — ஏறினால்
இன்றே பெற்றிடுவோம் ஏற்றமிகு வாழ்வுதனை
என்றே கூறுகின்றார் கேட்கிறது — எம் காதிலும்

உன் சிந்தனைக்கும் அவர்களின் சிந்தனைக்கும்
எத்தனையோ வேறுபாடு இருந்ததுண்டு
உன் வழியில் அவர்களும் உரமாக இருந்திருந்தால்
உலகமே போற்ற உரிமைதனை பெற்றிருப்போம்

ஊமைகளாய் இன்று அவர்கள் உணர்விழந்து கிடக்கின்றார்.
ஊர் கூடி இழுத்தால்தான் தேர் நகரும் எனத் தெரியாதோ
ஊர் விட்டு ஊர் போய் உரிமை பற்றி பேசுவோர்
உன் வழிக்கு வந்துவிட்டால் உயர்வடைவோம் உரிமையுடன்.

— கரையூரான்

# அமரர் ரவிராஜ் நினைவாக



தம்பி ரவிராஜின் கொலை அதிர்ச்சியையும் கவலையையும் தருகிறது. இந்த கொலை கலாச்சாரத்தை முடிவிற்கு கொண்டு வருவதன் மூலம் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ ஆயுதமேந்திய இளைஞர்கள் முன்வர வேண்டும். இன்றைய உடனடியானதும் அவசியமானதுமான விடயம் இதுவாகும். கொலைக் கலாச்சாரத்தை எவர் கைக்கொண்டாலும் தமிழ் மக்களுக்கு எந்தவித தீர்வையும் பெற்றுத்தரப் போவதில்லை. ரவிராஜ் மறறும் மெய்ப்பாதுகாவலர் மீதான கொலை மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். மிகவும் வன்மையாக இச் சம்பவத்தை கண்டிக்கின்றேன். எவர் இந்த கைங்கரியத்தை செய்திருந்தாலும் இதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்பது தான் த.வி.கூ யின் வேண்டுகோளாகும். ஒரு பாரம்பரிய மூத்த மிதவாத கட்சியின் அடிப்படையில் அனைத்து தரப்பினரிடமும் நான் இதனை வலியுறுத்துகிறேன்.

தம்பி ரவிராஜ் எமது த.வி.கூ யில் இருந்து நிர்ப்பந்தத்தினால் பிரித்தெடுக்கப்பட்டவர். அவரது அரசியல் வரவிற்கு நானும் ஒரு காரணமாக இருந்துள்ளேன். விடுதலைப் புலிகள் யாழ் மாநகர சபை மேயர்களான திருமதி சரோஜனி யோகேஸ்வரன், சிவபாலன் போன்றவர்களை கொலை செய்த வேளையில் யாரும் மேயராக பொறுப்பேற்க வராத போது உதவி மேயராக செயற்பட முன் வந்தவர் ரவிராஜ் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பின்னர் நடைபெற்ற இரண்டு பொதுத் தேர்தல்களில் யாழ் மாவட்ட வேட்பாளராக என்னுடன் இணைந்து ஒரே அணியில் ஒரே சின்னத்தில் போட்டியிட்டோம். வெற்றியும் பெற்றோம். பின்னர் அரசியல் சூழ்நிலைகள், நிர்ப்பந்தங்கள், பயம், காரணமாக அவர் என்னிடம் இருந்தும் த.வி.கூ யில் இருந்தும் பிரிய நிர்ப்பந்திக்கப்பட்டார்.

2004 தேர்தலிற்கு முன்பு த.வி. கூட்டணியும் ஒரு அங்கமாக தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்த காலத்தில் "நாங்கள் சொல்வதை செய்யத்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இருக்கிறார்கள்" என ஏளனமான கருத்தை விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்டன் பாலசிங்கம் முன்வைத்த பொழுது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மௌனமாக இருந்தனர். அக் கூற்றை மறுதலித்து கூட்டமைப்பினரை உடையவிடாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு புலிகளுக்கே உண்டு. எனவே பொறுப்புடன் பாலசிங்கம் பேச வேண்டும் என்று கனேடிய தமிழ் வானொலியினூடாக தெரிவித்திருந்தேன்.

இலங்கை திரும்பிய என்னிடம் "உங்களால்தான் அண்ணை தலை நிமிர்ந்து நிற்கிறோம்" என ரவிராஜ் தெரிவித்திருந்ததை இங்கு ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது.

நான் கேட்டபோது ஆர்வத்துடன் அரசியலில் இணைந்து எமது கட்சியான த.வி. கூட்டணியில் செயற்பட்டவர். ஒரு காலகட்டத்தில் இவர் எனது அணிக்காரர் என சில சக்திகளால் அடையாளம் காண்பிக்கப்பட்டவர். எமது அரசியல் நிலைப்பாடு வேறு வேறு நிலைப்பாடுகளாக பின்னர் மாறிய போதும் நான் அறிமுகப்படுத்திய தம்பி ரவிராஜ் அவசர அவசரமாக நிரந்தரமாகப் பிரிக்கப்பட்ட துயர் எனக்கும் உண்டு.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக யாழ்ப்பாணம் செல்லவே பயப்பட்டு த.வி.கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் ஒதுங்கி கட்சி உறுப்பினர்களின் மரணச்சடங்கிலேயே கலந்து கொள்ளாது கொழும்பில் தங்கியிருந்தபோது யாழ் மாநகர சபையின் தேர்தல் பிரச்சாரத்தினை நான் பொறுப்பேற்று முதன் முறையாக பல ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் த.வி.கூட்டணியை மீண்டும் யாழ்ப்பாணம் கொண்டு சென்று ஜனநாயக அரசியலிற்கு அடியெடுத்தபின் சில ஆண்டுகளில் ரவிராஜும் இணைந்து கொண்டு உதவி மேயரானார். ஆந்த ஆரம்பத்தின் தொடர்ச்சி தான் இன்றைய நான்கு கட்சிகளின் கூட்டமைப்பும் ரவிராஜின் பங்களிப்பும் இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பு கட்சியினர் எமது தொடக்கத்தை பின் தொடர்ந்தவர்கள்.

எமது தொடக்க முயற்சியில் இணைந்தவர்கள் பலர். சிவபாலன், சரோஜனி யோகேஸ்வரன், மதிமுகராசா போன்றவர்களின் தொடர்ச்சியாக ரவிராஜும் பலிகொள்ளப்பட்டு விட்டார். உற்சாகமும் திறமையும் கொண்ட ரவிராஜ் போன்ற பல இளம் தலைவர்களை தமிழ் இனம் தொடர்ந்து இழந்து கொண்டிருக்கின்றது என்பது மிகவும் வேதனைக்குரியது.

கூட்டணி சுயமான ஒரு ஜனநாயக அரசியல் கட்சியாக தமிழ் மக்களின அரசியல் அபிலாசைகளை முன்வைத்து செயற்பட்டு வந்தது போல் செயற்பட அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். அதை தடுததமையும் சுயமாக முடிவெடுக்க தெரியாத தமிழ் கூட்டமைப்பின் 21 பாராளுமன்ற உறுப்பினர்களும் இங்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். ●

# தேசிய அரசு அமைக்கும் தார்மீக கடமை தங்களுக்கு உண்டு

## எதிர்கட்சி தலைவருக்கு!

அமைச்சரும பாராளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ மகிந்த விஜயசேகர அவர்கள் கடந்த 22ம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி அவர்கள் தங்களுடன் இணைந்து தங்களை பிரதம அமைச்சராக கொண்டு ஒரு தேசிய அரசு அமைக்க விரும்புவதாக தங்களிடம் கூறுமாறு பத்திரிகைகளுக்கு கூறியுள்ளார். ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோள் சம்பந்தமாக எனது அவதானிப்பை கூற விரும்புகின்றேன். நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாரிய அக்கறை காரணமாக இக் கோரிக்கையை ஏற்க வேண்டிய தார்மீக கடமை தங்களுக்கு உண்டு இவ் ஆலோசனையை இந் நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்கள் ஆதரிப்பார்கள் என்பதையும் பல்வேறு இன மத மக்கள் பெருமளவில் வரவேற்பார்கள் என்பதையும் நான் நம்புகின்றேன். பல்வேறு மதத் தலைவர்களுடைய ஆதரவும் இதற்குண்டு. ஒருவருடைய சகிப்புத் தன்மையை மிஞ்சிய துன்பத்தை அனுபவித்து வந்த எமது மக்கள் சமாதானத்திற்காக ஏங்கி நிற்கின்றார்கள். சிரேஷ்ட அரசியல் வாதியாகிய நீங்கள் இருவரும் கடந்த 50 ஆண்டுகாலமாக நாடு எதை இழந்தது என்பதையும் அதை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பதையும் அறிந்திருக்கின்றீர்கள். கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள் பற்றிய தெளிவு மக்கள் மத்தியில் குறிப்பாக இளைய சமுதாயத்தினர் மத்தியில் குறைவாக இருப்பதே நாடு எதிர் நோக்கும் பல பிரச்சினைகளுக்கு காரணமாகும்.

பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா பெறுமதியான அரசுடையதும் பொது மக்களுடையதும் பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. அதேபோன்று ஏனைய இழப்புக்களின் பெறுமதியோ கணிக்க முடியாதவையும் மீளப்பெற முடியாதவையுமாகும். தமிழ், சிங்கள, முஸ்லீம் ஆகிய மூன்று பிரதான சமூகத்தினர் மத்தியில் யுத்தத்தினாலோ அல்லது வேறு விதத்தினாலோ 70,000 இற்கு மேற்பட்ட உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. கிளேமோர் மற்றும் குண்டு ஆகியவற்றால பேருந்துகள், புகையிரதங்கள், ஹோட்டல்கள், பொதுச்சந்தைகள், வீதியோரங்கள் போன்றவற்றில் இறந்த மக்களின் எண்ணிக்கை பல்லாயிரம். அப்பாவி பொது மக்களுடைய உயிரிழப்புக்கள் கணக்கில் அடங்கா. பள்ளிவாசல்களிலும், பௌத்த, இந்து கோவில்களிலும் பல படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் 30,000 இற்கும் மேற்பட்ட விதவைகளும், பெருமளவு அநாதைகளும் உருவாக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறியாததல்ல. எம்மில் பலர் அநாதரவற்ற நிலையில் உள்ளனர். 1958, 1977, 1983 ஆகிய வருடங்களில் பெரும் இனக்கலவரங்களும் இடையிடையே சிறு சிறு கலவரங்களும் நடந்தேறியுள்ளன. வட மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லீம் மக்கள் எதுவித காரணமுமின்றி குறுகிய கால அவகாசத்தோடு தமது வீடுகள், நகைகள், தொலைக்காட்சி, வானொலி, கார், லொறி போன்ற சகல சொத்துக்களையும் விட்டு விட்டு வெறும் ஐநூறு ரூபாவோடு வெளியேற்றப்பட்டனர். இவர்கள் கடந்த 17 வருட காலமாக தென்னிலங்கையில் 160 அகதி முகாம்களில் இருந்து நம் மண்ணுக்கு என்று திரும்புவோம் என்ற ஏக்கத்தோடு வாழ்கின்றனர். பலர் அங்கவீனர்களாகவும், கை, கால், கண்பார்வையற்றவர்களாகவும் வாழ்கின்றனர். எத்தனையோ சீமான்கள் ஒரே இரவில் ஓட்டாண்டி ஆக்கப்பட்டார்கள்.

எத்தனையோ பிள்ளைகள் தமது கல்வியை இழந்துள்ளனர். தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் பல்வேறு துறைகளில் தாம் தெரிந்திருந்த தொழில்நுட்ப திறமைகளை இழந்துள்ளனர். வடபகுதியைச் சேர்ந்த விவசாயிகள், மீனவர்கள் தம் தொழில்களை இழந்துள்ளனர். எத்தனையோ பேர் தமது அன்புக்குரியவர்களையும், பல குடும்பத்தினர் நம்பி வாழ்ந்த ஏக உழைப்பாளிகளையும் இழந்துள்ளனர். நான் கூட இரு சகோதரர்களையும் நான்கு பெறா மக்களையும் இழந்துள்ளேன். எத்தனையோ குடும்பங்கள் சிதறி உடைந்து போயுள்ளன. மீனவர்கள், விவசாயிகள், தொழில் நுட்பம் தெரிந்த பலர் ஆயிரக்கணக்கில் வேலையின்றி தம் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக நிரந்தர பயத்துடனும், பீதியுடனும் அனைவரும் வாழ்கின்றனர். இத்தகைய கொடுமைகள் முற்று முழுதாக நிறுத்தப்பட வேண்டாமா? நிறுத்த வேண்டுமெனில்



நாட்டில் பொறுப்புள்ள தலைவர்களுக்குள்ள ஒரே வழி உடைந்த புண்பட்ட அனைவரின் உள்ளங்களுக்கும் ஒன்று சேர்ந்து பகுதி பகுதியாக அன்றி ஒரு நிரந்தர தீர்வை காண்பதன் மூலமே. இதுமட்டுமல்ல இதைவிட இன்னும் துன்பகரமான சம்பங்கள் நமது நாட்டில் நடக்கின்றன. இருப்பினும் நாட்டு மக்களுடைய துன்ப துயரங்களைப் பற்றி அக்கறைபடாத ஒரு சிலர் இருக்கின்றனர். சிலர் தமது பதவிகளை காப்பாற்றுவதிலேயே கவனம் செலுத்துகிறார்களே அன்றி துன்பத்துடன் வாழும் மக்களுக்கு அனுதாபமாக ஒரு சொட்டு கண்ணீர் கூட சிந்த தயாரில்லை. நாட்டின் பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியாக பதவி ஏற்கக்கூடிய வாய்ப்பை உடைய நீங்கள் சந்தர்ப்பத்துக்கு உதவகூடிய வகையில் சகல பேதங்களையும் மறந்து துன்பப்படும் மக்களுடைய நல்வாழ்வுக்கு பெரும்மதிப்பளித்து தங்களுக்கு தரப்பட்ட இந்த வாய்ப்பை ஏற்க வேண்டும். தங்களுக்கு விசுவாசம் செலுத்துகின்ற பாராளுமன்ற அணியுடன் ஒன்று சேர்ந்து 50 வருடத்துக்கு மேற்பட்ட இந்த இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும். நம் நாட்டையும் மக்களையும், மக்களின் ஜனநாயக உரிமைகளையும் இணைந்து காப்பாற்றியவர்கள் என்ற பெருமையை சரித்திரம் தங்களுக்கு கொடுக்கும்.

தேசிய அரசு எவ்வளவு காலம் நீடிக்க வேண்டும் என்பதையும் எந்த கால எல்லைக்குள் இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் தாங்களே நிர்ணயிக்கலாம். தேர்தல் பிரச்சாரத்தின் போது இனப்பிரச்சனையை தேர்தல் பிரச்சாரத்துக்குள் சேர்க்காது தேர்தல் முடிந்த பின் ஓர் தீர்வை காண இருவரினதும் நடவடிக்கை அமைய வேண்டுமென நான் கேட்டிருந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்குமென நினைக்கிறேன்

இந்த நாட்டையும், அதனுடைய மக்களையும் நேசிக்கும் ஒரு நாட்டுப் பற்றாளன் என்ற வகையிலும் மக்கள் சார்பிலும் தாங்கள் இருவரும் தங்கள் அணியினரும் சகல அரசியல் பேதங்களையும் மறந்து ஒற்றுமையாக நம் நாட்டை முன்பிருந்த பழம் பெருமையோடு மக்கள் அனைவரும் சமமாக சகல உரிமைகளையும் அனுபவிக்கும் இலங்கை மாதாவின் பிள்ளைகளாக வாழ உதவ வேண்டுமென மன்றாட்டமாக கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய இந் நற் பணிக்கு சகல மதத் தலைவர்களடைய ஆசீர் வாதமும் வழி நடத்தலும் உண்டு. ●

எமது கட்சிக்காகவும் தமிழ் இனத்தின் விடிவிற்காகவும் உயிர்நீத்த எமது கட்சி தொண்டர்கள், தலைவர்கள் பற்றிய விபரங்கள், முக்கிய கட்டுரைகள் என்பனவற்றை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால் அவற்றை பொருத்தமான நேரத்தில் எமது உதயசூரியன் பத்திரிகையில் பிரசுரிப்போம் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு

**உதயசூரியன் பணிமனை**
**30/1பி அல்விஸ் பிளேஸ்**
**கொழும்பு –03**

**வருடச்சந்தா 150.00 ரூபா**

**உதய சூரியன் பத்திரிகையை பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்**

**இல: 38 சி, மக்கன்சி வீதி,**
**கெப்பிற்றிப்பொல மாவத்தை,**
**கொழும்பு - 5.**

இப்பத்திரிகை சுலலித்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு 30/1B, அல்விஸ் பிளேஸ், கொழும்பு 03 இல் உள்ள த.வி.கூட்டணியினரால் வெளியிடப்பட்டுள்ளது.